ஸ்ரீவாதிராஜரின்

கீசக வதெ

திரு. தாவணகெரெ பீமராவ்
அவர்களின் கன்னட உரையை
அனுசரித்து

தமிழில்

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
89044 58276. haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

ஸ்ரீவாதிராஜரின் கீசக வதெ

ஸ்ரீஹரிவாயு குருகளின் அருளால்
ஸ்ரீபுரந்தரதாசரின் ஆராதனை நாளான
01-02-2022 அன்று இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டது

தொடர்புக்கு:
'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
8904458276 haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

சலுகை விலையில் இந்தப் புத்தகம் வெளிவருவதற்கு பொருளுதவி புரிந்த ஹரி பக்தர்கள் அனைவருக்கும் நன்றி!!

|| ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து ||

ஸ்ரீ வாதிராஜர் தீர்த்தர் அருளிய கீசக வதெ

ஸ்ரீ மத்வ மத பரம்பரையில் உடுப்பி அஷ்ட மடங்களில் ஸோதே மடத்தின் பீடாதீஸராக அலங்கரித்தவர் ஸ்ரீவாதிராஜ தீர்த்தர். மத்வ ஸித்தாந்தத்தில் வியாஸ சாஹித்யம் மற்றும் தாஸ சாஹித்யம் என இரண்டுக்குமே தமது பங்களிப்பை அளித்த மஹனீயர். பலதரப்பட்ட காவிய ஸ்தோத்திர டிப்பணி மற்றும் வியாக்கியான கிரந்தங்களை இயற்றியதுடன், கன்னடத்திலும் துளு பாஷையிலும் 'ஹயவதன' முத்ரையிலே பலதரப்பட்ட கிருதிகளையும் ரசனை செய்துள்ளார். ஸ்ரீ வாயு பகவானின் மகிமைகளை அவதார லீலைகளை தம்முடைய கன்னட பதங்களிலே வர்ணித்திருக்கும் ஸ்ரீ வாதிராஜர், ஸ்ரீ வாயு பகவானின் இரண்டாவது அவதாரமான ஸ்ரீ பீமஸேனரின் லீலைகளில் ஒன்றான ஸ்ரீ மஹா பாரத விராட பர்வத்தில் விவரிக்கப்பட்டுள்ள 'கீசக வதெ' கட்டத்தை வர்ணிக்கும் வகையில் கன்னடத்தில் அருளிய கிரந்தமே 'கீசக வதெ' என்பதாகும்.

ஸ்ரீ வாதிராஜ தீர்த்தரின் 'கீசக வதெ' என்பது 23 பத்யங்களில் கன்னடத்தில் அமைந்த கிரந்தம் ஆகும். பொதுவாக மஹாபாரத பிரவசனம் மற்றும் சிரவணம் முதலானவற்றை விராட பர்வத்திலிருந்து ஆரம்பிக்கும் ஸம்பிரதாயம் உள்ளது. குருவின் மூலமாகவே ஹரி பக்தி சித்திக்கும் என்கின்ற வகையில் த்ரைலோக்ய குருவான ஸ்ரீ முக்ய ப்ராணரின் அவதாரமான பீமஸேனரின் பராக்கிரமத்தை வர்ணிக்கும் விராட பர்வத்தில் உள்ள பகுதிகளை ஸ்ரீ வாதிராஜர் மிக எளிதாகக் காவிய ரசத்துடன் பாமரரும் அறியும் வண்ணம் இதனை ரசனை செய்துள்ளார். எவ்விதம் மாற்றான் மனைவியான சீதையை அபகரித்த ராவணன் ஸர்வோத்தமனான ஸ்ரீ ராமனால் மாண்டானோ, அது போல பாரதி தேவியின் அவதாரமான திரௌபதியின் மேல் மோஹம்

கொண்ட கீசகன் ஜீவோத்தமரான பீமசேனரால் மாண்டு போனான் என்பதை விளக்கும் வகையில் இந்த 'கீசக வதே' அமைந்துள்ளது.

முதலில் பல்லவி மற்றும் அனுபல்லவி யில் "பீமஸேன காமினியாகலு", "பீமஸேன காமினியாகலு, ப்ரேமத ஸதிய காமிஸிதவன ஜாமராத்ரிகே ஸீளுவெனென்னுத ஸாமஜவரத்ன பாடுதலி" எனத் தொடங்கி த்ரௌபதியின் மேல் மோகம் கொண்ட கீசகனைக் கொல்வதற்காக, பீமஸேனன் இதையே ஸ்ரீ ஹரியின் பூஜை' என்ற அனுஸந்தானத்துடன் கஜேந்திர வரதனைத் துதித்து, ஸ்திரீ வேடம் பூண்டதாக ஸ்ரீவாதிராஜர் வர்ணித்து துவங்குகிறார்.

முதல் பத்யத்தில் யுதிஷ்டிரன் ஹஸ்தினாபுரத்தில் சூதாட்டம் ஆடி, சகுனியின் கபடத்தால் ராஜ்யத்தை இழந்து அர்ஜுனாதிகளுடன் சேர்ந்து ஸ்ரீ கிருஷ்ணரை தியானித்தவாறு 12 ஆண்டுகள் வனவாஸம் செய்து, ஓராண்டு அஞ்ஞாத வாஸத்தை செய்யும் பொருட்டு தமது ஸ்வரூபத்தை மறைத்துக்கொண்டு வேடங்களை தரித்து, விராடனின் தலைநகருக்குச் சென்று (மத்ஸ்ய தேஸம்) யதி வேடத்தில் மரியாதைகளை பெற்றுக் கொண்டு வந்ததையும், அரசனுடன் ராஜ போகங்களை போகித்தவாறு இருந்ததையும் "விஜய முக்யானுஜர ஒடகூடி புஜகஸாயிய பஜிஸித", "ராஜ்ய மத்ஸ்யனொளு போஜனவ மாடுத பூஜிஸி கொம்புது ஸோஜிகவு" எனக் கூறி விளக்குகிறார் ஸ்ரீவாதிராஜர்.

இரண்டாவது பத்யத்தில், பூஜ்யளான திரௌபதி தேவி நகரத்தின் கடைத் தெருவில் வந்து கொண்டிருந்தபோது, விராடனின் பத்னியான ராணி ஸுதேஷ்ணை, அவளின் ரூபத்தைக் கண்டு வியந்து, மரியாதையுடன் அழைத்து விசாரிக்க, தான் அங்கு வரக் காரணங்களை த்ரௌபதி கூற, பூமியில் இவளுக்குச் சமமான அறிவாளி யாரும் இல்லை என அறிந்து, தனக்கு முடி அலங்காரங்களைச் செய்து சேவை

செய்ய தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றதை, "நீ எனகெ வேணி ஹாகென்னுத பாணி ஹிடிது கரெதந்தளாக" போன்ற பதங்களினால் விளக்கியுள்ளார் ஸ்ரீவாதிராஜர்.

மூன்றாவது பத்யத்தில் ஸ்ரீ வாதராஜர், திக்விஜயத்திலிருந்து திரும்பிவந்த கீசகன், த்ரௌபதியைக் கண்டு, யாரெனத் தனது அக்காவான ராணி ஸுதேஷ்ணையைக் கேட்க ராணியானவள் தனக்கு தாஸியாக சேவை செய்ய அவளை அழைத்து வந்திருப்பதாகவும், அவளின் அழகை1000 முகம் கொண்ட ஸேஷ தேவனாலும் வர்ணிக்க இயலாது எனவும் கூறி, மேலும் அவள் இங்கு ஓராண்டு காலம் வாஸம் செய்ய இருப்பதாகவும் சொல்லக் கேட்டு, கீசகன் மீசையை முறுக்கிக்கொண்டு அந்த ஸைரந்திரியே தனது போகத்திற்குத் தக்கவள் என மகிழ்ந்ததாக என விவரித்துள்ளார்.

4 முதல் 6 வரையிலான பத்யங்களில், கீசகன் தனது மோகத்தை த்ரௌபதியிடம் வெளிக்காட்டிய விதத்தையும், அதற்கு திரௌபதி எச்சரித்த விதத்தையும் விளக்கும் வகையில் ஸ்ரீ வாதிராஜர், கீசகன் தனது சகோதரியுடன் உள்ள இந்த ஸைரிந்திரியின் முகத்தைக் கண்டால் அதிக குணங்களைக் கொண்டவளைப் போலுள்ளதை அறிந்து, அவள் தன்னைச் சேர்ந்த பிறகு, தன்னை விரும்பும்படியாக செய்வதற்குத் தேவையான செயல்களை செய்வதாகவும் எண்ணி, த்ரௌபதியின் முகத்தை அவன் பார்த்தாலும், கீசகனின் பயங்கர முகத்திற்கு பயந்து (நடித்து) தன் முகத்தை அவனுக்கு காட்டாமல் கம்பீரமாக த்ரௌபதி இருந்ததையும், அப்போது கீசகன் த்ரௌபதியிடம் வெறும் உணவிற்காக தன் அக்காவிற்கு முடி அலங்கார ஸேவை செய்வதை விடுத்து, தன்னுடன் வருமாறு கீழ்த்தரமான வார்த்தைகளைப் பேச, அதற்கு பதிலளிக்கும் வகையில் தன்னைப் போன்ற நல்ல குணம் நிரம்பியவள் அவனுக்கு கிடைக்க மாட்டாள் எனவும், தனது கணவனுக்குத் தெரிய வந்தால், அவனைக் கொன்று அவனது தேகத்தை அனைத்து திக்குக்கும் பலி கொடுப்பார்

எனவும் மிரட்டியதை "ரக்கஸ நினகெ தக்குவளே நானு முக்கண்ணனாதரு லெக்கிஸத பதி கக்கென பந்தரெ திக்கி நின்ன காய திக்கு திக்கிகெ பலி இக்குவரோ" போன்ற பதங்களால் விளக்கி மேலும் த்ரௌபதி கீசகனுக்கு எச்சரிக்கை விடுத்ததைக் கூறும்படியாக, தனது கணவர் கண்டுகொண்டால் அவளின் தலையை கத்தரித்து பந்தாடுவார் எனவும் கூறி, ராணி ஸுதேஷ்ணைக்கும் புத்தி உரைக்கும் விதத்தில் கீசகனுக்கு சரியான புத்தியை கூறும்படியும், அதிகாரத்தினால் பரஸ்த்ரீ விஷயத்தில் நடந்து கொள்ளும் விதத்தைக் கண்டிக்கும்படியும் வினவி, இல்லையேல் தண்டனைக்கு ஆளாகும்படி நேரிடும் எனவும் எச்சரித்து, கீசகனின் வலிமையை நம்பி இருப்பதால் அவனை எச்சரிக்க இயலாது எனக் கூறாமல், துஷ்டனின் சகவாசத்தை விடும்படி ராணிக்கு திரௌபதி புத்தி உரைத்ததையும் "லண்டனிகே புத்தி தண்டிஸி பேளதெ ஹிண்டிகொள்ளதிரு துண்டுமுக" போன்ற பத்யங்களினால் வர்ணித்துள்ளார்.

7 மற்றும் 8 வது பத்யங்களில் ராணி ஸுதேஷ்ணை கீசகனுக்கு எச்சரிக்கை விடுத்து புத்திமதி கூறுவதையும், அதற்கு கீசகன் பதில் அளிக்கும் விதத்தையும் விளக்கும் வாதிராஜர், ஸுதேஷ்ணை கீசகனிடம் எச்சரிக்கும் விதத்தில் அவன் செய்த காரியத்தினால் அவனின் உயிருக்கே ஆபத்து ஏற்படும்படி ஆனதாகவும் ஸைரந்திரி இனி வசப்படமாட்டாள், ஆதலால் ஊரை விட்டு வெளியேறுவது நன்று எனவும் கூறி, சதாசாரத்தில் நம்பிக்கை கொண்ட ஸைரந்திரியை தவறான கண்ணோட்டத்தில் நோக்கினால் அஷ்ட ஐஸ்வர்யங்களும் நாசமாகும், கெட்டுப்போவான் எனவும் புத்தியுரைக்க, அதற்கு பதிலளித்த கீசகன், உலகில் தனக்குச் சமமான வலிமையானவன் யாருமில்லை எனவும், எதிரிகளின் இதயத்தை மிதித்து எறியும் சக்தி கொண்ட தமக்கு பயமில்லை எனவும் கூறி, ஸைரந்திரியை யாரும் அறியாமல் ரகசியமாக தமது இடத்திற்கு அனுப்பினால், அவளை பட்டத்து ராணியாக அமர்த்தி, அனைவரையும் அவளுக்கு தாஸியாக

மாற்றுவதாகவும் இறுமாப்புடன் கூறுவதையும்," நிஷ்டெ ஸைரந்த்ரிய த்ருஷ்டிஸி நோடலு நஷ்டவாகுவது அஷ்டைஸ்வர்யவு", "குட்டிந்த நாரிய கொட்டு களுஹலு பட்டத ராணியோலிட்டு கொம்பெ" முதலான பதங்களினால் விளக்கியுள்ளார்.

9 மற்றும் 10 வது பத்யங்களில், கீசகனின் துஷ்ட பேச்சுக்களைக் கேட்ட ஸைரந்திரி, தனது கணவனால் அவன் உயிரை விட நேரிடும் என எச்சரிக்க, கீசகன் அவளைத் தடுத்து, கூந்தலை சரிசெய்யும் அவளின் தொழிலை இகழ்ந்து பேசியதையும், ஸைரந்திரி ஸ்ரீ கிருஷ்ணனைப் பிரார்த்தனை செய்து தாம் ராஜாதிராஜனின் மனைவியாக வாழ்ந்து ஏழ்மையின் காரணமாக பிறநாட்டு அரசர்களிடம் வேண்டும் நிலை வந்ததை பற்றிக் கூறி மன்னன் கீசகனால் ஏற்படும் அவமானத்தை பீமனிடம் சொல்லாதிருப்பது சரியல்ல என சிந்தித்து பீமனிடம் முறையிட்டதையும் ஸ்ரீவாதிராஜர் குறிப்பிட்டுள்ளார்.

11 முதல் 13 வரையிலான பத்யங்களில், நடுங்கும் குரலில் கண்ணீர் விட்டவாறு த்ரௌபதி பேசிய பேச்சுக்களையும் அவளின் வாடிய முகத்தையும் கண்டவுடனே பீமஸேனன் அவளின் கண்ணீரைத் துடைத்து, ஆறுதல் கூறி, கெட்ட பேச்சுக்களால் அவளை நோகடித்த கீசகனை அடித்துக் கொன்று எமனிடம் அனுப்புவதாக தைரியம் அளித்து அனுப்பி வைத்ததை "மிடுகி நின்னனு ஹிடித களனனு படிது யமனிகெ கொடுவ நோடெக" போன்ற பதங்களால் விளக்கி, பின்னர் த்ரௌபதி பீமஸேனரின் ஆணைக்கிணங்க கீசகனுக்குத் தாம் அவனிடம் வருவதாக வாக்களித்ததையும், அதற்கு துஷ்ட கீசகன் அடைந்த மகிழ்ச்சியையும், த்ரௌபதி அன்றிரவு நாட்டிய சாலைக்கு கீசகனை வருமாறு அழைத்த செய்தியையும் பீமனுக்குச் சொல்ல, துஷ்ட கீசகனின் தேகத்தைக் கிழிப்பதற்கு சரியான சமயம் வந்ததாக பீமன் தோள்தட்டியதையும் ஸ்ரீவாதிராஜர் "கூளன காயவ ஸீளலு தக்கந்த வேளெ

பந்தெனுத தோள ஹொய்து" முதலான பதங்களினால் வர்ணித்துள்ளார்.

14 முதல் 17 வரையிலான பத்யங்களில் பீமஸேனர் பெண் வேடம் பூண்டு நாட்டிய சாலைக்கு செல்லும் விதத்தைத் காவிய ரசத்துடன் வர்ணித்துள்ள ஸ்ரீ வாதிராஜர், ஸைரந்திரி எப்போது வருவாளோ என்றுகீசகன் அவ்விடத்தைச் சென்றடைய, அதே நேரத்தில் ஊரின் மக்கள் அறியாத வண்ணம், கீசகன் மோகிக்கும் வகையில் தனக்கு பெண் வேடமிட பீமஸேனர் கேட்க த்ரௌபதி வெட்கம் கொண்டதுடன், கணவரின் ஆணைப்படி பெண் வேடமிட பீமஸேனருக்கு நெற்றியில் திலகம், கண்ணுக்கு மை, ஜரிகை, பீதாம்பரம் ரவிக்கை முதலியவற்றை அளித்து மேலும் கழுத்தில் முத்து மாலையையும், இடுப்பில் ஒட்டியாணத்தையும், விரலில் மோதிரத்தையும், மூக்கில் மூக்குத்தியும், அழகான தங்கத் தோடுகளையும், தங்கமயமான கொண்டை, உச்சி வகிட்டில் ராகெடெயையும், கைக்கு வளையல்களையும், முத்துச்சரங்களையும் ரத்தின பதக்கங்களையும், த்ரௌபதி தேவி மரியாதையுடன் அணிவித்ததையும், மேலும் தலைக்கு மல்லிகை முடித்து, உடம்பிற்கு சந்தனம் பூசி, தாம்பூலத்தை மடித்து பீமசேனரிடம் கொடுக்க, ஸ்த்ரி வேடம் பூண்ட பீமஸேனர் ஸ்ரீ கிருஷ்ணரின் சங்கல்பம் ஈடேறப் போவதாகக் கூறி த்ரௌபதியுடன் நடன சாலைக்கு கிளம்பிய தையும் மிக அழகாக எடுத்தியம்பியுள்ளார்.

18 முதல் 20 வரையிலான பத்யங்களில் பீமஸேனருக்கும் கீசகனுக்குமிடையே நடந்த உரையாடல்களைக் குறிப்பிடும் வகையில் ஸ்ரீ வாதிராஜர், பெண் வேடமிட்ட பீமஸேனர் நடன சாலைக்கு வர, கீசகன் பீமனை ஸைலந்திரி என நினைத்து தாபத்தினால் வாடிய தனக்கு பரிகாரம் ஏற்பட்டது எனவும் ஆபரணங்களை அளித்து அலங்கரித்து வருமாறும் கூற, த்ரௌபதியின் (ஸைரந்திரி) குரலில் பீமன் கீசகனிடம் மீண்டும்

தனது கணவனால் ஆபத்து நேரிடும் என எச்சரித்தபோதும், காமவயப்பட்ட கீசகன் அதைப் பொருட்படுத்தாது பீமனை ஸ்பர்ஸம் செய்த மாத்திரத்தில் கல்லைப் போன்ற தேகத்தைக் கண்டு ஆச்சரியம் கொண்டு, பின்னர் பீமனின் முகத்தைப் பார்த்தவுடன் பயந்து ஓடியதையும், அதற்கு பதிலளித்த பீமன், பரஸ்திரியின் மேல் மோகம் கொண்டவர்களுக்கு தனது ரூபம் பயங்கரமானதாக இருக்கும் என எச்சரித்த தையும் "நாரியோ நீனேனு மாரியோ இன்னொந்து பாரி எனகெ நின்ன மோரெ தோரிஸெந்து", "பாரதந்த பரனாரேர மோஹிப க்ரூரகெ ஈ ரூப கோரவாகிஹுது" போன்ற பத்யங்களில் விளக்கி உள்ளார்.

21 முதல் 23 மூன்று வரையிலான பத்யங்களில், கீசக வத கட்டத்தை வர்ணித்து இந்தப் படைப்பை பூர்த்தி செய்திருக்கும் ஸ்ரீ வாதிராஜர், பீமஸேனர் மஞ்சத்தில் இருந்து எழுந்து, தனது முஷ்டியினால் கீசகனின் தலைமேல் குத்த அவனின் தலை வயிற்றின் சிக்கி கொடூரமாக இறந்ததையும் அதே நேரத்தில் பீமன் அனிருத்த ரூபி பரமாத்மாவை ஸ்மரித்துக் கொண்டு இதை சேவையாக பகவானே நடத்தியது என வேண்டி கீசகனின் தேகத்தை கீழே உருட்டி, பின்னர் த்ரௌபதியிடம் கீசகன் நிலையைக் காணும்படியும், அந்த துஷ்டனை எமலோகத்திற்கு அனுப்புவதாக அளித்த வாக்கை நிறைவேற்றியதாகவும், இனி ஸ்ரீ கிருஷ்ணனின் அருளால் கீசகனால் ஏற்பட்ட பயமில்லை எனவும், யாரும் பார்க்கும் முன் தான் சமையல் கட்டுக்கு செல்வதாகவும் கூறி, ஒருவேளை ராணியானவள் இதை அறிந்து, ஓராண்டு அஞ்ஞான வாஸம் முடிய இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் த்ரௌபதியை வெளியே அனுப்பினால் ஸ்ரீ ஹயவதனனைத் துதித்து கதையைத் தரிப்பதாக பீமஸேனர் உரைத்ததையும் "ஸமீரஜ குத்தலு கீசக பித்தனு பூமிலி", "ஹயவதனன பதபத்ம ஸ்மரிஸுத கதெயெனு தரிஸுவெனு" போன்ற பதங்களினால் வர்ணித்து ஸமர்ப்பணம் செய்துள்ளார்.

இத்தகைய உயரிய கிரந்தத்தை தினமும் பாராயணம் செய்து விசேஷமான அர்த்தங்களை தெரிந்து கொண்டு ஸ்ரீவாதிராஜரின் அந்தர்யாமியான ஸ்ரீ ஹயக்ரீவரின் அனுக்ரகத்திற்கு பாத்திரராவோமாக.

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஸ்ரீவாதிராஜர் அருளிய" கீசக வதே' என்ற உயரிய கிரந்தத்தின் மூலத்தையும், அதன் பிரதி பத அர்த்தங்களையும் பாமரரும் அறியும் வண்ணம்"ஜகன்னாத கேஸவ' திரு. சத்யநாராயணன் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். அவர் சமீபகாலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள ஸ்ரீ வாதிராஜரின் படைப்புகளான 'ஸ்வப்னபதம்', 'வைகுண்ட வர்ணென', 'ஹரி ஸர்வோத்தம ஸார', 'பாலகிருஷ்ணன் லீலே' போன்ற நூல்களின் வரிசையில் இதுவும் பெருமை சேர்க்கும் என்பதில் சந்தேகமில்லை. அவருக்கு ஸ்ரீ வாதிராஜரின் அந்தர்யாமியான ஸ்ரீ ஹயக்ரீவ ரூபி பரமாத்மா ஆயுள் ஆரோக்கியம் ஐஸ்வர்யம் மற்றும் மனச்சாந்தி இவைகளை அருளி இதுபோல் இன்னும் பல மொழிபெயர்ப்பு நூல்களைத் தமிழில் வெளியிட வேண்டும் என பிரார்த்தனை செய்கிறேன்.

'பிரஸங்க பூஷணம்',
'பிரவசன பூஷணம்', 'மத்வரத்னா'
S லஷ்மிபதிராஜா
மேடவாக்கம்

சென்னை
29.10.2021

ஸ்ரீ:

ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகள் இயற்றிய
கீசக வதெ
(மூலம் மட்டும் - பாராயணத்திற்காக)

ராகம்: பைரவி தாளம்: ஆட

பீ[4]மஸேன காமினியாத[3]னு ||பல்லவி

பீ[4]மஸேன காமினியாக[3]லு
ப்ரேமத[3] ஸதிய காமிஸித[3]வன
ஜா[2]மராத்ரிகெ[3] ஸீஸுவெனென்னுத
ஸாமஜவரத[3]ன பாடு[3]தலி ||அப

ராஜாதி[4]ராஜனு க[3]ஜபுரத[3]ல்லி
ஜூஜனாடி[3] தம்ம ராஜ்யவனு ஸோது
விஜயமுக்[2]யானுஜர ஒடகூ[3]டி[3]
பு[4]ஜக[3]ஷாயிய ப[4]ஜிஸுத

ஸூஜிமொனெயஷ்டு கோ[3]ஜில்லதெ[3] பே[3]ரெ
வ்யாஜதி[3]ந்த[3] ரூப மாஜிகொண்டு[3] போகெ[3]
ராஜ மத்ஸ்யனொளு போ[4]ஜனவ மாடு[3]த
பூஜிஸிகொம்பு[3]து[3] ஸோஜிக[3]வு ||1

மானினி த்[3]ரௌபதி[3] ஸ்ரேணிலி ப[3]ருதிரெ
த்ராணி விராடன ராணியு காணுத
த்[4]யானிஸி யாரெந்து[3] மன்னிஸி கேளலு
முன்னின ஸங்க[3]தி பேளித[3]ளு

ஆணிமுத்தினந்த[2] வாணிய கேளலு
க்ஷோணிலி நின்னந்த[2] ஜாணெய காணெனு
ப்ராணி நீ எனகெ[3] வேணி ஹாகென்னுத
பாணி ஹிடி[3]து[3] கரெதந்த[3]ளாக[3] ||2

ஈஷ கேளோ பரதே³ஷதி³ந்தொ³ப்³ப³ளு
கேஷ கட்டுவந்த வேஷதி³ ப³ந்த³ளு
ஸாஸிரமுக²த³ சேஷனீ ரூபவ
லேஸாகி³ தா வர்ணிஸலார

வாஸமாடு³வெனு மாஸ ஈராரெந்து³
க்³ராஸவ கொட்டென்ன போஷிஸெந்து³ நுடி³
தோ³ஸனு பேளலு மீஸெய திருஹுத்த
மீஸலெனகெ³ந்து³ தோஷிஸித³ ||3

நாரி அக்கனல்லி ஸேரிகொண்டிஹளு
மோரெய நோட³லு பா⁴ரிகு³ணத³ந்தெ
தோருதலிதெ³ என்ன ஸேரித³ மேலனு
சாரி எனிஸுவெ மீரித்³த³க்கெ

வாரிக³ண்ணிலொந்து³ ஸாரி நோட³லெந்து³
பா³ரிபா³ரியாகெ மோரெ நோடு³த்திரெ
நீரெ ஆ க்ரூரன கோ⁴ரரூபக்கஞ்சி
மோரெ தோரதெ³ க³ம்பீ⁴ரதி³ரெ ||4

அக்கனிகெ³ பா³சி ஹிக்¹கு¹வ ஸேவெகெ³
புக்கட்டி அன்னக்கெ ஸிக்குவரே நீனு
சிக்க ப்ராயக்கென்ன பக்கக்கெ ப³ந்த³ரெ
ஸக்கரெது³டி ஸவி த³க்கிஸுவெ
ரக்கஸ நினகெ³ த³க்குவளே நானு
முக்கண்ணனாத³ரூ லெக்கிஸித³ பதி
க⁴க்கனெ ப³ந்த³ரெ திக்கி நின்ன காய
தி³க்கு தி³க்கிகெ³ ப³லி இக்குவரோ ||5

ப⁴ண்ட³கீசக என்னுத்³த³ண்ட³தன கேளு
மண்டெ³ ஹிக்குவளெந்து³ கண்ட³ கண்ட³ ப³ளி
புண்டு³மாடு³வரெ க³ண்ட³ர்க¹ண்ட³ரெ தலெ
சண்ட³னாடு³வரோ க²ண்டி³தது³

மண்ட³லாதி⁴பன ஹெண்ட³தி நீனம்ம
உண்ட³மனெகெ³ ஹகெகொ³ண்ட³ளென்னதி³ரு
லண்ட³னிகெ³ பு³த்³தி³ த³ண்டி³ஸி பேளதெ³
ஹிண்டி³கொள்ளதி³ரு து³ண்டு³முக² ||6

தரள நின்னய து³ரளதனத³
பெ³ரள ஸன்னியெ க³ரளவாயிது
ஸரள ஸுரெகெ³ கொரள கொட³த³லீ
புரதொ³ளிரதெ³ தெரளின்ன

அரளமொக்³கெ³ய ஹெரளிக்³ஹாகுத
குருளு தித்³து³வ தரளெய கண்டு³
இருளு ஹக³லு பா³ரளு என்னுத
மருளுகொண்ட³ரெ ப³ருவளே ||7

நிஷ்டெ ஸைரந்த்⁴ரிய த்³ருஷ்டிஸி நோட³லு
நஷ்டவாகு³வது³ அஷ்டைஷ்வர்யவு
ப்⁴ரஷ்டனிகெ³ நானெஷ்டு பேளலின்ன
கட்டகடெ³கெ³ நீ கெ¹ட்டெ கண்ட்³ய

ஸ்ருஷ்டிலி நன்னந்த² க³ட்டிக³ன்யாரக்க
து³ஷ்டரெதெ³யனு மெட்டி ஸீளுவெனு
கு³ட்டிந்த³ நாரிய கொட்டு களுஹலு
பட்டத³ ராணியோலிட்டு கொம்பெ³ ||8
கீசகனாடித³ நீசனுடி³ கேளி
நாசி பதியொளு ஸுசிஸ்பே³கெந்து³
யோசிஸி ஸும்மனெ ஈசெ ப³ருதிரெ நி
ஷாசர கரவ சாசித³னு

பா³சி ஹிக்குவந்த² ப்ராசீனவேனிது³
வாசனாடு³ மீனலோசனெ என்னலு
ஆசரிஸி முந்து³ தோ¹சதெ³ க²ளன
விசாரிஸிகோ ஸ்ரீசக்ரபாணி ||9

பொடவிபதிக³ள மட³தி³ நானாகி³
ப³ட³தனவு ப³ந்து³ ஒட³லிகி³ல்லதெ³
நாட³ தொ³ரெக³ள பே³டு³வுதா³யிது
மாடு³வுதே³னெந்து³ நுடி³த³ளு

கேடி³கெ³ கீசக மாடி³த³ சேஷ்டெகெ³
கட³லஷாயி காபாட³பே³கென்னனு
ஆட³லஞ்சிகேனு ஷடு³ரஸான்னத³
அடி³கெ³ ருசிய நோடு³வரெ ||10

நடு³கு³வ த்⁴வனியலி பி³டு³த கண்ணீரனு
ஆடி³த³ மாதனு பா³டி³த³ முக²வனு
நோடி³தா³க்ஷண தொடெ³து³ நேத்ரவ
பி³டு³ பி³டு³ து³க்க²வ மாட³தி³ரு

மிடு³கி நின்னனு ஹிடி³த³ க²ளனனு
ப³டி³து³ யமனிகெ³ கொடு³வெ நோடீ³க³
தட³வ மாட³தெ³ கா³ட³தி³ போகு³ நீ
மாடி³த³ சிந்தெ கைகூ³டி³தெந்து³ ||11

மோஸமாடி³ போத³ளா ஷஷிமுகி²யிம்
தா³ஷெ பி³ட³தெ³ தா வ்யஸனகொ³ள்ளுத
பூ¹ஷரதாபக்கெ கேஸரிக³ந்த⁴வ
தா³ஸியரிந்த³ பூஸிகொண்டு³
ஹாஸுமஞ்சத³ல்லி பீ³ஸிகொள்ளுதலி
கா⁴ஸிபடு³த்திரெ ஆ ஸமயத³ல்லி
லேஸாகி³ நின்னபி⁴லாஷெ ஸல்லிஸுவெ
ஈஸு ஸம்ஷய பே³ட³ பா⁴ஷெ கொட்டெ ||12

நளினமுகி²யிந்து¹ பேளித³ மாதனு
கேளி ஹருஷவனு தாளித³னாக்ஷண
க²னு ஹொன்னின ஜாளிகெ³ கொட்டி
ந்னுளியத³லெ ரதிகேளிகா³கி³

காளக[3]த[3] மனெயொளகெ[3] பா[3]ரெந்து[3]
பேளித[3] ஸுளுஹனு பேளனு பீ[4]மகெ[3]
கூ[2]ளன காயுவ ஸீளலு தக்கந்த[2]
வேளெ ப[3]ந்தெ[1]னுத தோள ஹொய்து ||13

நாரி இன்னாவாக[3] ப[3]ருவளோ எந்து[3]
தா[3]ரிய நோடு[3]வ சோரகீசகனு
தோரித[3] டா[2]விலி ஸேருவ பே[3]க[3]னெ
ஊரொளகா[3]ரு அரியத[3]ந்தெ

க்ரூரனு மோஹிப தெரத[3]லெனகெ[3]
நாரிய ரூப ஷ்ருங்க[3]ரிஸு நீனெந்து[3]
வாரிஜமுகி[2]யள மோரெய நோட[3]லு
நீரெ த்[3]ரௌபதி[3] தா நாசித[3]ளு ||14

ப[3]ட்ட முக[2]கெ தானிட்டளு ஸாதி[3]ன
ப[3]ட்டனு பணியொளு இட்டு கண்ணு கப்பு |
ப[1]ட்டெ பீதாம்ப[3]ர உட்டுகோ நீனெந்து[3]
பு[1]ட்டாணிகுப்பஸ கொட்டளாக[3]

கட்டாணி முத்தனு கட்டெ தா கொரளிகெ[3]
க[4]ட்யாகி[3] சின்னத[3] பட்டி உடி[3]தா[3]ர
தி[4]ட்டனெ பெ[3]ரளிகெ[3] இட்டளு உங்கு[3]ர
விட்டரத்[3]ருஷ்டியு தாகுவந்தெ ||15
முத்தின மூகு[3]தி கெத்தித[3] வாலெயு
இத்தெர பு[3]கு[3]டி[3]யு நெத்திகெ[3] அரளெலெ
சித்தத[3] ர்யாக[3]டெ உத்தம க்யாதி[3]கெ[3]
வத்திலி ஷ்யாவந்திக்[3]ஹுவு கொ[3]ண்ட்[3]ய

ஹஸ்தக[1]ட[3]க[3]வு மத்தெ சூட்[3]ய வங்கி[1]
முத்தின ஹாரவு ரத்னத[3] பத[3]கவு
ஆர்த்தி[2]லி நாரியு குத்திகை ஹாகலு
ஹஸ்தினியோ ஈகெ சித்தினியோ ||16

முடி³கெ³ மல்லிகெ³ முடி³ஸி ஸுகந்த
தொடெது தாம்பூ³ல மடி³ஸிகொடு³தலி
ப்ரௌட⁴ன ஸ்த்ரீரூப நோட³லு கூ²ளனு
கூட³தெ³ ப்ராணவ பி³ட³னெந்த³ளு

மாடித்³யோசனெ கைகூடி³து இந்தி³கெ³
நோடு³ ஆ கிருஷ்ணனு கூடி³த³ ஆடவ
மட³தி³ நீனென்ன ஒட³னெ பா³ரெந்து³
நடெ³த³னா க²ள பி³டா³ரகெ ||17

இந்து³முக²த³ அரவிந்த³ நயனத³
மந்த³க³மனெயு ப³ந்த³ளு என்னுத
நந்த³ன தனயன கந்த³ன பா³தெ⁴கெ³
கந்தி³ குந்தி³ ப³ஹுனொந்தெ³னெந்த³

ஹிந்தி³னா ஸுக்ருததி³ந்த³லி நின்னொளா
நந்த³வாகி³ஹுது இந்தி³கெ³ கூடி³து
குந்த³ணதா³ப⁴ரண தந்தெ³ நினகா³கி³
சந்த³தி³ட்டு நீனந்த³வாகெ³ ||18

கு³ல்லு மாட³தி³ரோ மெல்லனெ மாதாடோ³
வல்லப⁴ர்க்கண்ட³ரெ ஹல்லுமுரிவரோ
ப³ல்லவ நினகெ³ ஸல்லது³ ஈ கார்ய
கெ³ல்லலரியெ கொல்லிஸிகொம்பெ³
சல்வெ கேளு நின்ன ஹுல்லெ க³ண்ண நோட¹
கொல்வ பகெ³கெ³ நா கெ³ல்லலாரெனெந்து³
க³ல்ல முத்³தி³ட்டு மையெல்லவ ஹுடு³கலு
கல்லெதெ³யல்லிரெ கு²ல்ல நொந்த³ ||19

நாரியோ நீனேனு மாரியோ இன்னொந்து³
பா³ரி எனகெ³ நின்ன மோரெ தோரிஸெந்து³
தீ⁴ரன ஸமீப பா³ரதெ³ ஓடு³வ
தா³ரிய நோடு³த்தலிரலாக³

பா³ரத³ந்த² பரனாரேர மோளெப
க்ரூரகெ³ ஈ ரூப கோ⁴ரவாகி³ஹுது³
ஸாரத³ மாதிது³ யாராத³ரேனீக³
மாரன தாபவ ஹாரிஸுவெ ||20

ஷுத்³த⁴ ஹெண்ணெந்து³ ப்ரஸித்³த⁴வாகி³தெ³ என்ன
வித்³யவ நினகீ³ ஸத்³யகெ தோருவெ
நித்³ரெ கெடு³வந்த² பு³த்³தி⁴யு நின்னது³
ஸத்³து³ மாட³தெ³ முத்³தி³ஸென்ன

பு³த்³தி⁴வந்தெந்து³ வத்³தி³கெ³ ஹோக³லு
எத்³து³ ஸமீரஜ கு³த்³த³லு கீசக
பி³த்³த³னு பூ⁴மிலி கெ³த்³தெ³னுத அனி
ருத்³த⁴ன ஸ்மரிஸுதலெத்³த³ பீ⁴ம ||21

கெட்ட கீசக தா கொட்ட லாஞ்ச²னதி³
பெ³ட்டத³ந்த² தே³ஹ பி³ட்ட நின்னவன
பட்டாகி³ தோருவெ த்³ருஷ்டிஸு என்னலு
ப்⁴ரஷ்டன நோடு³வுதே³னெந்த³ஞு

கொட்ட பா⁴ஷெயு ஈக³ முட்டிது நினகெ³
கிருஷ்ணன த³யதி³ கஷ்டவு ஹிங்கி³து
பட்டணகீ ஸுத்³தி³ முட்டத³ முஞ்செயெ
கு³ட்டிலி போகு³வெ த²ட்டனெந்த³ ||22
அரஸி நின்னொஞு ஸரஸ பே³கெம்ப³
புருஷன ஜீவதொ³ரஸெ கொந்தெ³னு
ஹருஷதீ³ புரத³ அரஸு எம்மனு
இரிஸிகொண்டொ³ந்து³ வருஷவாயிது

பெ³ரஸித³ ஸ்னேஹக்கெ விரஸப³ந்தெந்து³
ஸரஸிஜாக்ஷியு கரெஸி நின்னொள
கி³ரஸதி³ரெ ஹயவத³னன பத³பத்³ம
ஸ்மரிஸுத க³தெ³யனு த⁴ரிஸுவெனு ||23

ஶ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

ஸ்ரீ:

கிருஷ்ணாய வாஸுதேவாய ஹரயே பரமாத்மனே ।
ப்ரணத: க்லேஷ நாஷாய கோவிந்தாய நமோ நம: ।।
அப்ரமம் பங்கரஹிதம் அஜடம் விமலம் ஸதா ।
ஆனந்ததீர்த்தமதுலம் பஜே தாபத்ரயாபஹம் ।।
தபோவித்யா விரக்த்யாதி ஸத்குணௌக காகரானஹம்
வாதிராஜகுரூன் வந்தே ஹயக்ரீவ தயாஸ்ரயான் ।।

ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகள் இயற்றிய கீசக வதெ

23 நுடிகளைக் கொண்ட இந்த தேவரநாம, ஸ்ரீமன் மகாபாரத விராட பர்வத்தில் வரும் 'கீசக வதெ' கதையை நிரூபிக்கிறது. ஸ்ரீமன் மகாபாரத பிரவசன சிரவணாதிகளை, விராட பர்வத்திலிருந்து துவக்கும் சம்பிரதாயம் இருக்கிறது. ஸ்ரீபாரதிபதிகளான ஸ்ரீவாயுதேவர், சர்வலோக குருகள். உபதேஷகர் என்னும் பிற அனைத்து குருகளில், அவர்களின் சித்த நியாமகராக நின்று, சர்வஜீவருக்கு ஸ்வயோக்ய ஸர்வவித ஞானோபதேஷகர் - இவரே. குருபக்தி இல்லாமல், முக்தி யோக்ய ஜீவருக்கு, ஹரிபக்தி கிடைப்பதில்லை. ஹரிபக்தி இல்லாமல் ஸ்ரீஹரி, பிரசன்னன் ஆவதில்லை. அது இல்லாமல் மோட்சம் இல்லை. ஆகையாலேயே ஜகத்குருகளான ஸ்ரீவாயுதேவரின் இரண்டாம் அவதாரமான ஸ்ரீபீமசேனனில், அவரே ஜீவோத்தமர் என்னும் ஞானமும், சிறந்த பக்தியும் உண்டாகி, ஸ்ரீவிஷ்ணு பக்தி உதயமாவதற்கு முன்னர், 'கீசக வதெ'யின் கதாசிரவணம் ஆகவேண்டும் என்று இந்த சம்பிரதாயத்தை துவக்கியவரின் நோக்கமாக இருக்கிறது.

கீசகன் விஷயாஸக்த புருஷர்களையும், அந்த விஷயங்களையும் புறக்கணித்து, (விஷய போகத்தின் ஆசையையும் விட்டு), ஸ்ரீஹரி கொடுத்த போகங்களை,

பற்றற்றவர்களாக போகித்து, அதன் மூலமாகவும் ஸ்ரீஹரிப்ரீதியையே காட்டி, போக்ய வஸ்துகளின் பிராப்திக்காக அதிக முயற்சிகளை செய்யாதிருப்பதே வைராக்கியம் ஆகும். வைராக்கியம் இல்லாமல் ஞானம் இல்லை. அது இல்லாமல் ஹரிகுருகளில் பக்தி இல்லை. பற்பல போக்ய விஷயங்களில் 'ஸ்த்ரி'யே மிகவும் ஈர்ப்பதாகும். (ஸ்த்ரியர்களுக்கு புருஷன் ஈர்ப்பு). ஆகையாலேயே, தற்காலிக விஷயங்களின் ஆசையை விடவேண்டும் என்று திரும்பத்திரும்ப சொல்லப்படுகிறது.

விலக்கவேண்டிய விஷயங்களின் (பரஸ்த்ரி முதலான) ஆசைகூட அனர்த்தகமே ஆகிறது. அதற்காக செய்யும் முயற்சி மற்றும் அதன் சாட்சாத் போகம் அனர்த்தமே ஆகும் என்று சொல்லவும் வேண்டுமா?

பாரதி அவதாரளான த்ரௌபதியின் சங்கத்தை கீசகன் விரும்பினான். அதற்காக துஷ்ட முயற்சிகளை செய்தான். திரௌபதி, பரஸ்த்ரி மட்டுமல்ல. அவள் தேவதை. ஜகத்குருகளின் மனைவி. இந்த மகாபாவத்தினால், கீசகன் கொல்லப்பட்டான். தமஸ்ஸினை அடைந்தான். கீசகனால் குறியீடாக கருதப்படும் 'விஷயாஸக்தி'யின் அழிவு, ஸ்ரீவாயுதேவரால் மட்டுமே சாத்தியம். பிறரால் அல்ல. ஜீவோத்தமரான இவரின் காம-ஜய சாமர்த்தியம் ஸ்வபாவிகமானதாகும். ஆகையாலேயே, ஸ்ரீவாயுதேவரின் மகிமையை அறிந்து, அவரில் பக்தி செய்து, அவரின் அருளைப் பெறுவது, அனைத்து முமுக்ஷுகளின் கடமையாக இருக்கிறது.

ராகம்: பைரவி தாளம்: ஆட

பீ⁴மஸேன காமினியாத³னு ||பல்லவி

பீ⁴மஸேன காமினியாக³லு
ப்ரேமத³ ஸதிய காமிஸித³வன
ஜா²மராத்ரிகெ³ ஸீளுவெனென்னுத
ஸாமஜவரத³ன பாடு³தலி ||அப

பீமஸேன - பீமசேனன். காமினியாதனு - ஸ்த்ரீ வேடத்தை தரித்தான் (விஷய சுகத்தை விரும்புபவனுக்கு மட்டும் ஸ்த்ரீத்வ. பிறருக்கு அல்ல. இது இல்லாத பீமசேனருக்கு எங்கிருந்து வந்தது ஸ்த்ரீத்வ?). ப்ரேமத ஸதிய - ப்ரியபதியான திரௌபதியை. காமிஸிதவன - (அங்கசங்கத்தை விரும்பிய) கீசகனை. ஜாமராத்ரிகெ - இரவு நேரத்தில் (யாமம் கழிந்த இரவு நேரத்தில்). ஸீளுவெனென்னுத - கொல்வேன் என்று. பீமஸேன - பீமஸேனன். காமினியாகலு - ஸ்த்ரீ வேடத்தை தரித்து (அஞ்ஞாத வாசத்தில் இருந்த காரணத்தால் நிஜ ஸ்வரூபத்தை வெளிப்படுத்த). ஸாமஜவரதன - கஜேந்திர வரதனான ஸ்ரீகிருஷ்ணனை. பாடுதலி - வணங்கியவாறு (ஸ்த்ரீ வேடத்தை தரித்தான்.

எந்தவொரு காரியத்தையும் ஸ்ரீஹரிபூஜை என்றே அறிந்து, ஸ்ரீஹரி ஸ்மரணையுடன் துவக்குவது, ஸ்ரீபீமசேனனின் ஸ்வபாவம். 'கரிஷ்யமாணானி ச தஸ்ய பூஜாம் ஸங்கல்பயாமாஸ ஸ ஷுத்த புத்தி:' (மத்வ விஜயம்). அடுத்த செயல்களை ஸ்ரீஹரிபூஜை என்று சங்கல்பம் செய்யும் ஷுத்த அந்தக்கரணம் ஸ்ரீபீமசேனனுடையது.

ராஜாதி[4]ராஜனு க[3]ஜபுரத[3]ல்லி
ஜூஜனாடி[3] தம்ம ராஜ்யவனு ஸோது
விஜயமுக்[2]யானுஜர ஒடகூ[3]டி[3]
பு[4]ஜக[3]ஷாயிய ப[4]ஜிஸுத

ஸுஜிமொனெயஷ்டு கோ[3]ஜில்லதெ[3] பே[3]ரெ
வ்யாஜதி[3]ந்த[3] ரூப மாஜிகொண்டு[3] போகெ[3]
ராஜ மத்ஸ்யனொளு போ[4]ஜனவ மாடு[3]த
பூஜிஸிகொம்பு[3]து[3] ஸோஜிக[3]வு ||1

ராஜாதிராஜன் - யுதிஷ்டிரன். கஜபுரதல்லி - ஹஸ்தினாபுரத்தில். ஜூஜனாடி - சூதாட்டம் ஆடி. தம்ம ராஜ்யவன்னு ஸோது - தம் அரசு, செல்வங்களை சகுனியின் கபடத்தால் இழந்து. விஜய

முக்யானுஜர ஒடகூடி - அர்ஜுனாதி சகோதரர்களுடன். புஜக ஷாயிய பஜிஸுத - ஸ்ரீகிருஷ்ணனை தியானித்தவாறு. ஸுஜிய மொனெயஷ்டு பேரெ கோஜில்லதெ - ஊசிமுனை அளவிற்குக்கூட தன்னுடையது என்னும் இடம் இல்லாமல். (ஒப்புக் கொண்டதைப் போல, காட்டில் 12 ஆண்டுகளை கழித்து, பிறகு ஓராண்டு அஞ்ஞாத வாசத்தை செய்து, வேறு). வ்யாஜதிந்த - காரணங்களைக் காட்டி. ரூப மாஜிகொண்டு - தம் ஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டு (வேடங்களை தரித்து). போகெ - விராடனின் தலைநகருக்குச் சென்று. ராஜமத்ஸ்யனொளு - மத்ஸ்ய தேஷாதிபதியான விராடனுடன். போஜன மாடுத - அரசனுடன் ராஜபோகங்களை போகித்தவாறு. பூஜிஸிகொம்புது - யதி வேடத்தில் இருந்த தான், மரியாதைகளைப் பெற்றுக் கொண்டு வசித்திருந்தான். ஸோஜிகவு - வியப்பானது (அது கிருஷ்ணனின் கருணையே ஆகும்).

** அனைத்து பகவத் அவதாரங்களும் சேஷசாயியான ஸ்ரீ அனந்தபத்மனாப ரூபத்திலிருந்து வெளிப்பட்டிருக்கின்றன. ஸ்ரீகிருஷ்ணனும் அனந்தபத்மனாபனே. 'ஏதேஸ்வாம்ஷகலா: பும்ஸ: கிருஷ்ணஸ்து பகவான் ஸ்வயம் (பாகவதம்). பலி சக்ரவர்த்தி அசுர ஆவேசத்தினால், ஷ்வேதத்வீபத்தில் படுத்திருந்த சேஷசாயியின் கிரீடத்தை திருடிக் கொண்டு செல்ல, கருடன் அதை திரும்ப அவனிடமிருந்து பெற்று கொண்டு வர, நடு வழியில் கோமந்த பர்வதத்தின் மேல் படுத்திருந்த ஸ்ரீகிருஷ்ணனின் தலையின் மேல் வைத்து சமர்ப்பித்தான். அது ஸ்ரீகிருஷ்ணனின் தலைக்கு சரியாக பொருந்தியது என்று பாகவதம் சொல்கிறது. இதிலிருந்து ஸ்ரீகிருஷ்ணனே சேஷசாயி என்று தெரிகிறது.

** பஞ்ச பாண்டவர்களும், திரௌபதியும் ஒவ்வொருவராக விராடனிடம் வந்து சேர்ந்தார்கள். பாண்டவர்கள் காட்டிற்குச் சென்றுவிட்டதால், அவர்களுடன் இருந்த தாங்கள் பிழைப்பிற்காக இங்கு வந்திருப்பதாக கூறினர். அனைவரும்

தேவயோக்ய தேஜஸ்ஸினால் ஒளிர்ந்து கொண்டிருந்தனர். இவ்வாறு இருந்தாலும், இவரே பாண்டவர்களோ என்னும் சந்தேகம் யாருக்கும் வரவில்லை. இது வியப்பான விஷயம் அல்லவா? எப்படியாவது, யாருக்கும் தெரியாமல் அஞ்ஞாத வாசத்திற்காக ஒரு தக்க இடத்தை சேர்ந்து கொண்டது, ஸ்ரீகிருஷ்ணனின் அருளே ஆகும். விராட நகருக்கு நுழையும் முன்னர், யாராலும் இவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியாது என்று ஸ்ரீதுர்க்கை வரம் அளித்திருந்தார்.

மானினி த்[3]ரௌபதி[3] ஸ்ரேணிலி ப[3]ருதிரெ
த்ராணி விராடன ராணியு காணுத
த்[4]யானிஸி யாரெந்து[3] மன்னிஸி கேளலு
முன்னின ஸங்க[3]தி பேளித[3]ளு

ஆணிமுத்தினந்த[2] வாணிய கேளலு
க்ஷோணிலி நின்னந்த[2] ஜாணெய காணெனு
ப்ராணி நீ எனகெ[3] வேணி ஹாகென்னுத
பாணி ஹிடி[3]து[3] கரெதந்த[3]ளாக[3] ||2

மானினி திரௌபதி - பூஜ்யளான பாரதிதேவியின் அவதாரளான திரௌபதி தேவி. ஸ்ரேணிலி - நகரத்தின் கடைத்தெருவில். பருதிரெ - வந்து கொண்டிருந்தபோது. த்ராணி - சமர்த்தளான. விராடன ராணியு - விராடனின் பத்னியான ராணி சுதேஷ்ணை. காணுத - (திரௌபதியைக்) கண்டு. யாரெந்து தியானிஸி - அவளின் ரூபத்தைக் கண்டு வியப்படைந்து, இவள் யாராக இருக்கலாம் என்று சிந்தித்து. மன்னிஸி - அழைத்து மரியாதை அளித்து. யாரெந்து கேளலு - யார் என்று விசாரிக்க. முன்னின ஸங்கதி - முன்னர் நடந்த விஷயங்களை, தான் அங்கு வரவேண்டிய காரணங்களை. பேளிதளு - கூறினாள்.

ஆணிமுத்தினந்த - சிறந்த முத்தினைப் போல விலைமதிப்பற்ற. வாணிய கேளலு - பேச்சினைக் கேட்டால். க்ஷோணிலி - பூமியில். நின்னந்த - உனக்கு சமளான.

ஜாணைய காணெனு - அறிவாளியைக் காணேன். ப்ராணி - அனாதையான ஹே பெண்ணெ. எனகெ - எனக்கு. வேணி ஹாகென்னுத - எனக்கு முடி அலங்காரங்களை செய்தவாறு சேவை செய்தவாறு இரு என்று, பாணி ஹிடிது - கை பிடித்து. கரெதந்தளாக - தன் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு சென்றாள்.

** பரிசுத்தமும் தெளிவும் ஆன பேச்சு, ஸைரந்திரி, வாக் அபிமானியான பாரதிதேவியின் அவதாரம் என்பதை குறிக்கிறது.

ஈஷ கேளோ பரதே³ஷதி³ந்தொ³ப்³ப³ளூ
கேஷ கட்டுவந்த வேஷதி³ ப³ந்த³ளூ
ஸாஸிரமுக²த³ சேஷனீ ரூபவ
லேஸாகி³ தா வர்ணிஸலார

வாஸமாடு³வெனு மாஸ ஈராரெந்து³
க்³ராஸவ கொட்டென்ன போஷிஸெந்து³ நுடி³
தோ³ஸனு பேளலு மீஸெய திருஹுத்த
மீஸலெனகெ³ந்து³ தோஷிஸித³ ||3

திக்விஜயத்திலிருந்து திரும்பி வந்த கீசகன், திரௌபதியைக் கண்டு, இவள் யார் என்று தன் அக்காவான ராணி சுதேஷ்ணையை கேட்க, அவள் அனைத்தையும் கூறுகிறாள். அப்போது தாசி ரூபத்தில் இருந்த அவள், தன் போகத்திற்கு ஏற்றவள் என்று நினைக்கிறான்.

ஈஷ - ஹே சமர்த்த கீசகனே. கேளோ - (இந்த சைரந்திரி இங்கு எப்படி வந்தாள் என்பதை சொல்கிறேன்) கேள். ஒப்பளூ - ஒரு ஸ்த்ரீ. பரதேஷதிந்த - அன்ய தேசத்திலிருந்து. கேஷ கட்டுவந்த வேஷதி - சைரந்திரி (பிறரின் வீட்டில் இருந்து கந்த லேபன, முடி அலங்காராதி வேலைகளை செய்யத்தக்க தாசி) வேடத்தில் வந்தாள். ஸாஸிரமுகத - 1000 முகம் கொண்ட. சேஷ - சேஷதேவர். ஈ ரூபவ - இவளின் அழகான ரூபத்தை.

தா - தான். லேஸாகி - முழுமையாக. வர்ணிஸலார - வர்ணனை செய்ய முடியாதவனாக ஆகிறான்.

மாஸ ஈராரு - ஓராண்டு காலம். வாஸ மாடுவெனு எந்து - உங்களிடம் வசிக்கிறேன் என்றும். க்ராஸகொட்டு - அன்னம் அளித்து. என்ன - என்னை பார்த்துக் கொள்ளுங்கள் என்று. நுடித - அவள் கூறிய. ஓஸனு - அனைத்தையும். பேளலு - கேட்டு. மீஸெய திருஹுத்த - மீசையை முறுக்கியவாறு. மீஸலு எனகெந்து - அந்த ஸைரந்திரி என் போகத்திற்கு தக்கவள் என்று. தோஷிஸித - மகிழ்ந்தான்.

** பீமன், பலபத்ரன், ஷல்யன், கீசகன் ஆகிய நால்வரும் பலசாலிகள். மற்றும் இதே கிரமத்தில் ஒருவரைவிட மற்றொருவர் வலிமையில் குறைந்தவர். கீசகன் அனைவரைவிட குறைந்தவன். கீசகனின் வலிமையின் உதவியால், விராடன் தன் சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். இதனை அறிந்த சுதேஷ்ணை, 'ஈஷ' என்று அவனை அழைக்கிறாள்.

** ருத்ராதி ஸர்வதேவானாம் மனோவாசாமகோசரா |
அனாதிதஸ்ச ஸர்வக்ஞா த்வத்ரிம்ஷல்லக்ஷணைர் யுதா ||
(ஸத்தத்வ ரத்ன மாலா).

ருத்ராதி தேவதைகளுக்கும்கூட பாரதிதேவி சிக்காத, குண பூர்ணள். சேஷ, கருட, ருத்ராதி தேவதைகளாலும்கூட முழுமையாக வர்ணிக்கப்பட முடியாதவள். அவர்களால் சிந்திக்க முடியாத அனந்த குணங்களைக் கொண்டவள். இவ்வாறு மகாமகிமைகளான சைரந்திரியைக் கண்ட சுதேஷ்ணை, அவளை வேதாதிகளால் வணங்கத்தக்க பூஜ்ய ஸ்த்ரி என்று ஊகித்தாள் என்று 'கேஷ கட்டுவந்த வேஷதி' என்னும் சொல் குறிக்கிறது.

நாரி அக்கனல்லி ஸேரிகொண்டிஹளு
மோரெய நோட³லு பா⁴ரிகு³ணத³ந்தெ
தோருதலிதெ³ என்ன ஸேரித³ மேலனு
சாரி எனிஸுவெ மீரித்³த³க்கெ

வாரிக³ண்ணிலொந்து³ ஸாரி நோட³லெந்து³
பா³ரிபா³ரியாகெ மோரெ நோடு³த்திரெ
நீரெ ஆ க்ரூரன கோ⁴ரரூபக்கஞ்சி
மோரெ தோரதெ³ க³ம்பீ⁴ரதி³ரெ ||4

நாரி - இந்தப் பெண் (ஸைரந்திரி). அக்கனல்லி - என் அக்காவான சுதேஷ்ணையிடம். ஸேரிகொண்டிஹளு - சேர்ந்திருக்கிறாள். மொரெய நோடலு - இவளின் முகத்தைப் பார்த்தால். பாரிகுணதந்தெ - அதிக குணங்களைக் கொண்டவளைப் போல. தோருதலிதெ - தெரிகிறது. என்ன ஸேரித மேலெ - என்னைச் சேர்ந்த பிறகு. மீரித்தக்கெ - அதிக சேவைக்கு. அனுசாரி எனிஸுவெ - யோக்யளாக செய்கிறேன் (என் ப்ரியளாக ஆவதற்குத் தேவையான செயல்களை செய்கிறேன்) - என்று கீசகன் சிந்தித்தான்.

வாரெகண்ணல்லி - கடைக்கண்ணினால். ஒந்து ஸாரி நோடலெந்து - ஒரு முறையாவது (தன்னை) பார்க்கட்டும் என்று. பாரிபாரியெ - திரும்பத் திரும்ப. ஆகெ மோரெ நோடுத்திரெ - திரௌபதியின் முகத்தை, கீசகன் பார்த்தாலும். நீரெ - அந்தப் பெண். ஆ க்ரூரன - அந்த துஷ்ட ஸ்வபாவ கீசகனின். கோர ரூபக்கஞ்சி - பயங்கரமான ரூபத்திற்கு பயந்து. மோரெ தோரதெ - தன் முகத்தை அவனுக்குக் காட்டாமல். கம்பீரதி இரெ - கம்பீரமாக இருக்க முயன்றாள்.

அக்கனிகெ³ பா³சி ஹிக்¹கு¹வ ஸேவெகெ³
புக்கட்டி அன்னக்கெ ஸிக்குவரே நீனு
சிக்க ப்ராயக்கென்ன பக்கக்கெ ப³ந்த³ரெ
ஸக்கரெது³டி ஸவி த³க்கிஸுவெ

ரக்கஸ நினகெ³ த³க்குவளே நானு
முக்கண்ணனாத³ரூ லெக்கிஸத³ பதி
க⁴க்கனெ ப³ந்த³ரெ திக்கி நின்ன காய
தி³க்கு தி³க்கிகெ³ ப³லி இக்குவரோ ||5

அக்கனிகெ - என் அக்காவிற்கு. பாசி ஹிக்குவ சேவெகெ - முடி அலங்காராதி சேவைக்காக. புக்கட்டெ அன்னக்கெ - அன்ன சேவை அல்லது வேறு இலவசமாக போடும் அன்னத்திற்கு. நீனு - உன்னைப் போல அழகான பெண். ஸிக்குவரே - சேர்ந்திருக்கலாமா? சிக்க ப்ராயக்கெ - உன் வயதிற்கு தக்கவாறு. என்ன பக்கக்கெ பந்தரெ - என் அருகில் வந்தால். (என்னுடையவள் ஆனால்). ஸக்கதெதுடி ஸவி - சுவையான (என் உதட்டுச் சுவையை). தக்கிஸுவெ - உனக்குக் கொடுக்கிறேன். (கீசகன் இத்தகைய கீழ்த்தரமான பேச்சினைப் பேச), திரௌபதி, ரக்கஸ - ஹே அரக்கனே. நானு - என்னைப் போன்றவள். நினகெ துக்குவளே - உனக்கு கிடைப்பாளா? (உன் வசம் ஆவாளா?). முக்கண்ணனாதரூ - த்ரி நேத்ரனான சிவனே ஆனாலும். லெக்கிஸத - கணக்கில் எடுக்காமல் (கவனிக்காமல்). பதி - என் கணவன். கக்கனெ பந்தரெ - தற்செயலாக வந்தால் (உன் கெட்ட நடவடிக்கைகளை அறிந்தால்). நின்ன காய - உன் தேகத்தை. திக்கி - கொன்று. திக்கு திக்கிகெ - அனைத்து திசைகளுக்கும். பலி இக்குவரோ - பலி கொடுப்பார் (உன் தேகத்தை, மாமிசம் தின்பவர்களுக்கு பலி கொடுத்துவிடுவார்).

ப⁴ண்ட³கீசக என்னுத்³த³ண்ட³தன கேளு
மண்டெ³ ஹிக்குவளெந்து³ கண்ட³ கண்ட³ ப³ளி
புண்டு³மாடு³வரெ க³ண்ட³ர்க¹ண்ட³ரெ தலெ
சண்ட³னாடு³வரோ க²ண்டி³ததி³

மண்ட³லாதி⁴பன ஹெண்ட³தி நீனம்ம
உண்ட³மனெகெ³ ஹகெகொ³ண்ட³ளென்னதி³ரு
லண்ட³னிகெ³ பு³த்³தி³ த³ண்டி³ஸி பேளதெ³
ஹிண்டி³கொள்ளதி³ரு து³ண்டு³முக² ||6

பண்ட கீசக - ஹே வெட்கம் கெட்ட கீசகனே. என்ன - என். உத்தண்டதன - சாமர்த்தியத்தை (ஆளுமையை). கேளு - கேள் (அறிந்து எச்சரிக்கையாக இரு). மண்டெ ஹிக்குவளெந்து - தலை வணங்கும் அல்ப ஸேவகி என்று. கண்ட கண்ட பளி - கண்டதையெல்லாம். புண்டுமாடுவரெ - மானத்தை எடுக்கலாமா? (இப்படி கெட்ட வழியில் நடக்கலாமா). கண்டர்க்கண்டரெ - (அப்படி செய்வதை) என் கணவர் பார்த்துவிட்டால். கண்டிததி - நிச்சயமாக. தலெ - உன் தலையை. சண்டனாடுவரு - கத்தரித்து, பந்தினைப் போல எறிவர்.

இவ்வாறு கீசனுக்கு புத்தி சொல்லி, திரௌபதி ராணி, ஸுதேஷ்ணைக்கு சொல்கிறாள். அம்ம - ஹே தாயே. நீனு - நீயாவது. மண்டலாதிபன ஹெண்டதி - அரசனின் மனைவி. உண்ட மனெகெ - இவ்வளவு காலம் அன்னத்திற்காக வந்த வீட்டிற்கு. ஹகெகொண்டளு - எதிரியானாள். என்னதிரு - என்று சொல்ல வேண்டாம். (உன் தம்பி கீசகனின் மேல் நான் உன்னிடம் சொல்லும் அவதூறினால், என் மேல் தவறாக கருதாதே). லண்டனிகெ - துர்மார்க்கியான (நிர்லஜ்ஜ - வெட்கம் கெட்ட) உன் தம்பிக்கு. தண்டிஸி - தண்டனை கொடுத்து (சன்மார்க்க்த்தை உபதேசித்து). புத்தி பேளதெ - புத்தி சொல்லாமல் (பர ஸ்த்ரீயர்களில் விஷயத்தில் நடந்து கொள்ள வேண்டிய நல்ல மார்க்கத்தை சொல்லாமல்). துண்டுமுக - உன் அழகான முகத்தை. ஹிண்டி கொள்ளதிரு - அவதூறு கூறினாள் என்று கோபம் கொள்ளாதே.

** அதிகாரத்தினால் புத்தி சொல்வாயாக. கேட்கவில்லை யென்றால், தக்க தண்டனைக்கு ஆளாவாய் என்று சொல்.

ராஜனின் ஸ்தானமே கீசகனின் வலிமையை நம்பி இருக்கும்போது, எனக்கு எப்படி தைரியம் வரும்? என்று சொல்லாதே. துஷ்டனின் சகவாசத்தை விடு. உன் ஸ்தானமானங்களைக் காப்பவர்கள் வேறு (ஸ்ரீஹரி வாயுகள்) என்பதை அறி.

தரள நின்னய து³ரளதனத³
பெ³ரள ஸன்னியெ க³ரளவாயிது
ஸரள ஸுரெகெ³ கொரள கொட³த³லீ
புரதொ³ளிரதெ³ தெரளின்ன

அரளமொக்³கெ³ய ஹெரளிக்³ஹாகுத
குருளு தித்³து³வ தரளெய கண்டு³
இருளு ஹக³லு பா³ரளு என்னுத
மருளுகொண்ட³ரெ ப³ருவளே ||7

சைரந்திரியின் பேச்சினைக் கேட்டு, ஸுதேஷ்ணை கீசகனிடம் இவ்வாறு சொல்கிறாள். தரள - ஹே தம்பியே. நின்னய துரளதனத - உன் கெட்ட நடவடிக்கையினால். பெரளஸன்னெயே - (சைரந்திரியைக் கண்டு நீ செய்த) செயல்களை. கரளவாயிது - விஷயம் ஆயிற்று (உன் பிராணத்திற்கே அபாயம் ஆயிற்று). ஸரள ஸுரெகெ - வாள் முனைக்கு. கொரள கொடதலெ - (உன்) தலையைக் கொடுத்தாற் போல. ஈ புரதொளிரதெ - இந்த பட்டணத்தை விட்டு, இன்னு தெரளு - இப்போதே சென்றுவிடு. (ஸைரந்திரி இங்கு இருக்கும்வரை நீ செல்).

அரளுமொக்கெய - 'அரளமொக்கு' என்னும் ஆபரணத்தை அல்லது மல்லிகை மொட்டினை. ஹெரளிகெ ஹாகுத - கழுத்தில் போட்டுக் கொண்டு. குருளு தித்துவ - நெற்றியை சரிப்படுத்தி முகத்தை அலங்கரிக்கும். தரளெய கண்டு - பெண்களைக் கண்டு. இருளு ஹகலு - இரவும் பகலும் (நாள் முழுவதும்). பாரளு என்னுத்த - (என்னிடம்) வரவில்லை

என்று. மருளுகொண்டரெ - ஆசைப்பட்டால். பருவளே - அவள் உன்னிடம் வருவாளா?. கண்டிப்பாக வரமாட்டாள்.

நிஷ்டெ ஸைரந்த்[4]ரிய த்[3]ருஷ்டிஸி நோட[3]லு
நஷ்டவாகு[3]வுது[3] அஷ்டைஷ்வர்யவு
ப்[4]ரஷ்டனிகெ[3] நானெஷ்டு பேளலின்ன
கட்டகடெ[3]கெ[3] நீ கெ[1]ட்டெ கண்ட்[3]ய

ஸ்ருஷ்டிலி நன்னந்த[2] க[3]ட்டிக[3]ன்யாரக்க
து[3]ஷ்டரெதெ[3]யனு மெட்டி ஸீளுவெனு
கு[3]ட்டிந்த[3] நாரிய கொட்டு களுஹலு
பட்டத[3] ராணியோலிட்டு கொம்பெ[3] ||8

நிஷ்டெ ஸைரந்திரிய - (சதாசாரத்தில்) திட நம்பிக்கை உள்ள சைரந்திரியை. த்ருஷ்டிஸி நோடலு - ஆசையுடன் பார்த்தால். அஷ்டைஸ்வர்யவு நஷ்டவாகுவுது - (அந்த மகாபாவத்திலிருந்து) அரசு, செல்வம், சேனை, யானை, குதிரை, குடை, சாமர, பல்லக்கு - இந்த எட்டு செல்வங்களும் நாசம் அடைகின்றன. ப்ரஷ்டனிகெ - நீதி கெட்ட உனக்கு. நானெஷ்டு பேளலி - நான் என்னவென்று புத்தி சொல்வது?. கட்டகடெகெ - (இந்த துஷ்ட ஆசையை பூர்ணமாக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்யாமல்), கடைசியில். நீ - நீ. கெட்டெ கண்ட்ய - கெட்டுப் போவாய், பார். எச்சரிக்கையாக இரு.

சுதேஷ்ணை இவ்வாறு சொல்ல, சைரந்திரியை அடையும் தன் நோக்கத்தை இவ்வாறு சொல்கிறான் கீசகன்.

அக்க - ஹே அக்கா. ஸ்ருஷ்டிலி - உலகில். நன்னந்த - எனக்கு சமமான. கட்டிகனாரு - வலிமையானவர் யார்? (யாரும் இல்லை). துஷ்டரெதெயனு மெட்டி - என் விரோதிகளின் இதயத்தை மிதித்து. ஸீளுவெனு - எறிகிறேன் (எனக்கு யாராலும் எந்த பிரச்னையும் வருவதில்லை. பயப்படாதே). நாரிய - இந்த பெண்ணை (ஸைரந்திரியை). குட்டிந்த - ரகசியமாக யாருக்கும் தெரியாமல். கொட்டுகளுஹலு -

என்னிடம் அனுப்பினால். பட்டத ராணியொல் - பட்டத்து ராணியைப் போல (என் அந்தப்புர பெண்கள் அனைவரையும் அவளின் தாசியாக ஆக்கி, அவளை முக்கியமானவளாக ஆக்கி). இட்டுகொம்பெ - வைத்துக் கொள்கிறேன்.

கீசகனாடித[3] நீசனுடி[3] கேளி
நாசி பதியொளு ஸுசிஸ்பே[3]கெந்து[3]
யோசிஸி ஸும்மனெ ஈசெ ப[3]ருதிரெ நி
ஷாசர கரவ சாசித[3]னு

பா[3]சி ஹிக்குவந்த[2] ப்ராசீனவேனிது[3]
வாசனாடு[3] மீனலோசனெ என்னலு
ஆசரிஸி முந்து[3] தோ[1]சதெ[3] க[2]ளன
விசாரிஸிகோ ஸ்ரீசக்ரபாணி ||9

5ம் நுடியில் நிரூபித்த கீசகனின் துஷ்ட பேச்சுகளைக் கேட்ட சைரந்திரியின் மனோபாவங்களை இந்த நுடியில் வர்ணிக்கிறார். கீசகனாடித - கீசகன் கூறிய. நீச நுடி - கெட்ட பேச்சுக்களைக் கேட்டு. நாசி - (வெட்கத்துடன்) தலை குனிந்து. பதியொளு - தன் கணவனுக்கு. ஸுசிஸபேகெந்து - தகுந்த நடவடிக்கைகளை எடுக்கச் சொல்ல வேண்டும் என்று. யோசிஸி - சிந்தித்து. ஸும்மனெ - 6ம் நுடியின் முதல் பாதியில் நிரூபித்ததைப் போல. தன் கணவனால் உயிரை விடுவாய் என்று சொல்லி. அவனுடன் வாதத்தை வளர்க்காமல். ஈசெ பருதிரெ - வேறு இடத்திற்கு (அவன் இல்லாத இடத்திற்கு) வந்தாள். நிஷாசர - அந்த அசுரன் (கீசகன்). கரவ - தன் கையை. சாசிதனு - தடுத்துப் பிடித்தான். அவளை தடுத்து இவ்வாறு கூறினான்.

பாசி ஹிக்குவந்த - தலை கூந்தலை சரிப்படுத்தி பின்னல் போடும் (இந்த சிறிய சேவையினால் வாழ்ந்து வரும்). பிராசீனவேனிது - உன் எந்த பிராரப்த கர்மத்தின் பலன் இதுவா? வாசனாடு - (ஹே சைரந்திரியே) பேசு. மீனலோசனெ -

ஹே மீன்களைப் போல கண்களைக் கொண்டவளே. என்னலு முந்துதோரதெ - அடுத்து எதையும் செய்யப் பிடிக்காமல். ஸ்ரீசக்ரபாணி - ஹே சக்ர ஹஸ்த ஸ்ரீகிருஷ்ணா. யோசித்து செய்து. களன - இந்த துஷ்டனுக்கு. விசாரிஸிகோ - தண்டனையைக் கொடுப்பாயாக.

பொடவிபதிக³ள மட³தி³ நானாகி³
ப³ட³தனவு ப³ந்து³ ஒட³லிகி³ல்லதெ³
நாட³ தொ³ரெக³ள பே³டு³வுதா³யிது
மாடு³வுதே³னெந்து³ நுடி³த³³ளு

கேடி³கெ³ கீசக மாடி³த³ சேஷ்டெகெ³
கட³லஷாயி காபாட³பே³கென்னனு
ஆட³லஞ்சிகேனு ஷடு³ரஸான்னத³
அடி³கெ³ ருசிய நோடு³வரெ ||10

சைரந்திரி, கீசகனின் கேள்விக்கு பதில் அளிக்கிறாள்.

பொடவிபதிகள மடதி நானாகி - நான் ராஜாதி ராஜர்களின் மனைவியாக இருந்து. படதனவு பந்து - சமய சந்தர்ப்பங்களால். ராஜ்ய, ஐஷ்வர்யாதிகளை இழந்து ஏழ்மை வந்துவிட. ஒடலிகெ இல்லதெ - வயிற்றிற்கு இல்லாமல். நாடதொரெகள - பிற நாட்டு அரசர்களை. பேடுவுதாயிது - அன்னத்திற்காக வேண்டும் நிலை வந்துவிட்டது. மாடுவுதேனு - தெய்வத்தின் முன் மனித முயற்சி எடுபடுமா? என்ன செய்வது?. எந்து நுடிதளு - என்று கேட்டாள் (மற்றும் தனக்குள் இவ்வாறு சொல்லிக் கொண்டாள்). கேடிகெ கீசக - துஷ்ட கீசகன் (தனக்கு வரும் விபத்தினை லட்சியம் செய்யாமல் இருக்கும் இவன்). மாடித சேஷ்டெகெ - செய்த கெட்ட நடவடிக்கைகளுக்கு. என்னனு - என்னை. கடலஷாயி - பத்பனாபனான (பாற்கடலில் படுத்திருப்பவனான) ஸ்ரீகிருஷ்னன். காபாடபேகு - (அவனை தண்டித்து) என்னை காப்பாற்ற வேண்டும். ஆடலு - இருப்பதை சொல்ல (ஸ்ரீபீமசேனனிடம்

சொல்லி, கீசகனின் சம்ஹாரத்தை செய்வதற்கு). ஏனு அஞ்சிகெ - என்ன பயம்? (ராணியின் அறிவான பேச்சுகள் வீண் ஆனது). ஷடுரஸான்னத - ராணி நமக்கு கொடுத்துக் கொண்டிருக்கும் சுவையான ஷட்ரஸ அன்னத்தை. நோடுவரெ - கவனிக்க முடியுமா? அன்னத்திற்காக துஷ்ட கீசகனால் ஆகும் அவமானங்களை ஸ்ரீ பீமசேனனிடம் சொல்லாதிருப்பது எப்போதும் சரியல்ல. இவ்வாறு சிந்தித்த திரௌபதி, ஸ்ரீபீமசேனனிடம் வந்து, துஷ்ட கீசகனின் செயல்களை விவரித்து முறையிடுகிறாள்.

நடு³கு³வ த்⁴வனியலி பி³டு³த கண்ணீரனு
ஆடி³த³ மாதனு பா³டி³த³ முக²வனு
நோடி³தா³க்ஷண தொடெ³து³ நேத்ரவ
பி³டு³ பி³டு³ து³க்க²வ மாட³தி³ரு

மிடு³கி நின்னனு ஹிடி³த³ க²ளனனு
ப³டி³து³ யமனிகெ³ கொடு³வெ நோடீ³க³
தட³வ மாட³தெ³ கா³ட³தி³ போகு³ நீ
மாடி³த³ சிந்தெ கைகூ³டி³தெந்து³ ||11

நடுகுவ த்வனியலி - நடுங்கும் குரலில். கண்ணீரனு பிடுத - கண்ணில் நீர் விட்டவாறு. ஆடித மாதனு - (திரௌபதி கீசகனின் தவறான பேச்சினை விவரித்து) கூறிய பேச்சுகளை. பாடித முகவனு - வாடிய முகத்தையும். நோடிதாக்ஷண - கண்ட உடனேயே. நேத்ரவ தொடெது - (பீமசேனன்). அவளின் கண்ணீரை துடைத்து. விடு விடு துக்கவ மாடதிரு - யோசனையை விடு. கவலைப்படாதே என்றான். நின்னனு மிடுகி - உன்னை நீதிகெட்ட பேச்சுக்களால் மனதை நோகடித்த. ஹிடித களனனு - கை பிடித்த துஷ்டனை. படிது - அடித்துக் கொன்று. யமனிகெ கொடுவெ - கொல்கிறேன். யமனிடம் அனுப்புகிறேன். நோடீக - சீக்கிரமாக இந்த காரியத்தைப் பார்ப்பாய். தட மாடதெ - நேரத்தை வீண் அடிக்காமல். காடதி போகு - வேகமாகச் செல். நீ மாடித சிந்தெ - உன் ஆலோசனை

(இந்த துஷ்டனுக்கு தக்க தண்டனையை கொடுக்க வேண்டும் என்னும் உன் யோசனை). கைகூடிதெந்து - நல்லதாக ஆயிற்று. நீ போகு - திடமாக நம்பிக் கொண்டு. நான் சொல்வதைப் போல செய்பவளாக - நீ போ.

** சைரந்திரியை கீசகன் கை பிடித்து இழுக்க, அவளோ தப்பித்துச் செல்லும்போது, கோபம் கொண்டு அவளை காலினால் உதைத்த விஷயத்தையும் ஹேதி நாமக சூர்யனின் சேவகன், அவளை காப்பாற்றியதையும் பீமசேனன் அறிந்திருந்தான்.

** அந்த இரவில் ஆள் அரவமற்ற நாட்டியசாலையில் உன் ஆசையை நிறைவேற்றுவேன் என்று கீசகனுக்கு தெரிவித்து, நீயும் அந்த இடத்திற்கு போய் இரு என்று பீமசேனன் திரௌபதிக்கு சொல்லி, பயம் இல்லாமல் அந்த துஷ்டனிடம் செல் என்று சொல்கிறான்.

மோஸமாடி[3] போத[3]ளா ஷஷிமுகி[2]யிம்
தா[3]ஷெ பி[3]ட[3]தெ[3] தா வ்யஸனகொ[3]ள்ளுத
பூ[1]ஷரதாபக்கெ கேஸரிக[3]ந்த[4]வ
தா[3]ஸியரிந்த[3] பூஸிகொண்டு[3]

ஹாஸுமஞ்சத[3]ல்லி பீ[3]ஸிகொள்ளுதலி
கா[4]ஸிபடு[3]த்திரெ ஆ ஸமயத[3]ல்லி
லேஸாகி[3] நின்னபி[4]லாஷெ ஸல்லிஸுவெ
ஈஸு ஸம்ஷய பே[3]ட[3] பா[4]ஷெ கொட்டெ ||12

ஸ்ரீபீமசேனனின் ஆணைக்கேற்ப கீசகனுக்கு தான் வருவதாக நம்பிக்கை கொடுக்கிறாள் சைரந்திரி. ஆ ஷஷிமுகி - அந்த சந்திரமுகி (ஸைரந்த்ரி). மோஸமாடி போதளு - ஏமாற்றி என் கையிலிருந்து தப்பினாள். எந்து - என்னும் காரணத்தினால். ஆஷெ பிடதெ - அவளை அடையும் ஆசையை விடாமல். தா - தான். வ்யஸனகொள்ளுத - துக்கப்பட்டவாறு. போஷர தாபக்கெ - புஷ்ப பாணத்தின் (மன்மதனின்) தாபத்தினால். அதனை

பரிகரிப்பதற்காக. கேஸரி கந்தவ - கேசரி பரிமள சந்தனத்தை. தாஸியரிந்த - சேவகியர் மூலமாக. பூஸிகொண்டு - தேகத்தில் பூசிக்கொண்டு. ஹாஸுமஞ்சதல்லி - படுக்கையில். பீஸிகொள்ளுதலி - காற்று வீசிக்கொண்டு. காஸிபடுத்திரெ - கஷ்டப்பட்டவாறு இருக்க. ஆ ஸமயதல்லி - அப்போது. சைரந்திரி வந்து. லேஸாகி - எந்த நிர்பந்தனத்திற்கும் ஆளாகாமல், நன்றாக. நின்னபிலாஷெ - உன் மன ஆசையை. ஸல்லிஸுவெ - நடத்துகிறேன். ஈஸு ஸம்ஷய பேட - இதில் சிறிதும் சந்தேகம் இல்லை. பாஷெ கொட்டெ - வாக்களிக்கிறேன். நான் குறிப்பிட்ட இடத்திற்கு கண்டிப்பாக இன்று இரவு வந்து சேர்கிறேன்.

நளினமுகி²யிந்து¹ பேளித³ மாதனு
கேளி ஹருஷவனு தாளித³னாக்ஷண
க²ளனு ஹொன்னின ஜாளிகெ³ கொட்டி
ந்னுளியத³லெ ரதிகேளிகா³கி³

காளக³த³ மனெயொளகெ³ பா³ரெந்து³
பேளித³ ஸுளுஹனு பேளனு பீ⁴மகெ³
கூ²ளன காயுவ ஸீளலு தக்கந்த²
வேளெ ப³ந்தெ¹னுத தோள ஹொய்து ||13

நளினமுகியு - அந்த தாமரை முகத்தவளான சைரந்திரி. இந்து பேளித மாதனு - இவ்வாறு கூறியதைக் கேட்டு. ஆ க்ஷண - உடனடியாக. களனு - துஷ்ட கீசகன். ஹருஷவனு தாளிதனு - மகிழ்ச்சியடைந்தான். ஹொன்னின ஜாளிகெ கொட்டு - தங்க வலையில் சிக்க வைத்து. இன்னுளிய தலெ - அதன் பிறகு அங்கு நிற்காமல். ரதிகேளிகாகி - அங்கசங்கத்திற்காக. காளகத மனெயொளகெ பாரெந்து - அன்றிரவு நாட்டியசாலைக்கு வருமாறு. பேளித - கீசகனுக்கு கூறிய. ஸுளுஹனு - குறிப்பினை. பீமகெ - பீமசேனனுக்கு. பேளலு - (திரௌபதி) கூறியபோது. கூளன காயவ - துஷ்ட கீசகனின் தேகத்தை. ஸீளனு - கிழிப்பதற்கு (கொல்வதற்கு). தக்கந்த - யோக்யமான.

வேளை - சமயம். பந்தெனுத - வந்தது என்று. தோள ஹொய்த - தோள் தட்டிக் கொண்டான் (உற்சாகம் அடைந்தான்).

நாரி இன்னாவாக³ ப³ருவளோ எந்து³
தா³ரிய நோடு³வ சோரகீசகனு
தோரித³ டா²விலி ஸேருவ பே³க³னெ
ஊரொளகா³ரு அரியத³ந்தெ

க்ரூரனு மோஹிப தெரத³லெனகெ³
நாரிய ரூப ஷ்ருங்க³ரிஸு நீனெந்து³
வாரிஜமுகி²யள மோரெய நோட³லு
நீரெ த்³ரௌபதி³ தா நாசித³ளூ ||14

ஸ்ரீபீமசேனன் திரௌபதியிடம் ஏகாந்தத்தில் கூறுகிறான்.

நாரியு - அந்தப் பெண் (ஸைரந்திரி). இன்னு - திரும்ப. ஆவாக பருவளோ - எப்போது வருகிறாளோ. எந்து - என்று. தாரிய நோடுவ - (அந்த இடத்திற்கு முதலிலேயே சென்று) காத்திருக்கும். சோரகீசகனு - கள்ளன் கீசகன். தோரித டாவிலி - திரௌபதி கூறிய இடத்தில். ஸேருவ - போய் சேர்கிறான். பேகனெ - ஆகையால், சீக்கிரமாக. ஊரொளகெ ஆரூ அரியதந்தெ - ஊரின் மக்களுக்கு தெரியாததைப் போல (யாருக்கும் தெரியாதவாறு நான் அங்கு சென்று சேருமாறு). மத்து க்ரூரனு மோஹிபதெரதலி - உக்ர கீசகன் என்னை மோகிக்குமாறு. எனகெ - எனக்கு. நாரிய ரூப ஷ்ருங்கரிஸு - ஸ்த்ரீ ரூபம் வருமாறு எனக்கு அலங்காரம் செய். எந்து - என்று சொல்லி. வாரிஜமுகியள - கமலமுகியான திரௌபதி. மோரெய நோடலு - முகத்தை (பீமசேனன்) பார்க்க. நீரெ திரௌபதி - அழகான திரௌபதி. தா - தான். நாசிதளூ - வெட்கம் அடைந்தாள். புருஷ ஸ்ரேஷ்டனுக்கு பெண் வேடம் எப்படி போடுவது என்று வெட்கம் அடைந்தாள்.

ப[3]ட்ட முக[2]கெ தானிட்டளு ஸாதி[3]ன
ப[3]ட்டனு பணியொளு இட்டு கண்ணு கப்பு ।
ப[1]ட்டெ பீதாம்ப[3]ர உட்டுகோ நீனெந்து[3]
பு[1]ட்டாணிகுப்பஸ கொட்டளாக[3]

கட்டாணி முத்தனு கட்டெ தா கொரளிகெ[3]
க[4]ட்யாகி[3] சின்னத[3] பட்டி உடி[3]தா[3]ர
தி[4]ட்டனெ பெ[3]ரளிகெ[3] இட்டளு உங்கு[3]ர
விட்டரத்[3]ருஷ்டியு தாகுவந்தெ ।।15

திரௌபதி வெட்கம் அடைந்தவாறு, கணவனின் ஆணைப்படி அவனுக்கு பெண்ணின் அலங்காரம் செய்கிறாள். பட்ட முககெ - விசாலமான முகத்திற்கு. பணெயொளு - நெற்றியில். ஸாதின பட்டனு - திலகத்தை. தானிட்டளு - திரௌபதி வைத்தாள். கண்ணுகப்பு - கம் மையினை. இட்டு - கண்ணிற்குத் தடவி. பட்டெ பீதாம்பர - ஜரிகை பீதாம்பரத்தை. உட்டுகோ நீனெந்து - நீங்களே கட்டிக் கொள்ளுங்கள் என்று சொல்லி. ஆக - அப்போது. புட்டாணி குப்பஸவ - சிறியதான ஒரு ரவிக்கையை. கொட்டளு - கொடுத்தாள்.

கட்டாணி முத்தனு - நல்ல முத்து மாலையை. தா - தானே. கொரளிகெ கட்டி - பீமசேனனின் கழுத்தில் அணிவித்து. சின்னத பட்டி உடிதார - தங்க ஒட்டியாணத்தை. கட்டி - பீதாம்பரத்தின் மேல் இடுப்பில் கட்டி. விட்டர - பரஸ்த்ரீகள் மேல் ஆசைப்படும் புருஷர்களின். த்ருஷ்டியு தாகுவந்தெ - பார்வை படுமாறு (அவர்கள் ஆசைப்படுமாறு). திட்டனெ - உடனடியாக (அல்லது தைர்யதிந்த - வெட்கப்படாமல்). பெரளிகெ - பீமசேனனின் விரலுக்கு. இட்டளு உங்குர - மோதிரத்தை அணிவித்தாள்.

முத்தின மூகு³தி கெத்தித³ வாலெயு
இத்தெர பு³கு³டி³யு நெத்திகெ³ அரளெலெ
சித்தத³ ர்யாக³டெ உத்தம க்யாதி³கெ³
வத்திலி ஷ்யாவந்திக்³ஹூவு கொ³ண்ட்³ய

ஹஸ்தக¹ட³க³வு மத்தெ சூட்³ய வங்கி¹
முத்தின ஹாரவு ரத்னத³ பத³கவு
ஆர்த்தி²லி நாரியு குத்திகை ஹாகலு
ஹஸ்தினியோ ஈகெ சித்தினியோ ||16

திரௌபதி, ஸ்ரீபீமசேனின் அலங்காரத்தை செய்கிறாள்.

முத்தின மூகுதி - முத்து மூக்குத்தி. கெத்தித வாலெயு - அழகான தோடுகள். இத்தெர புகுடியு - இரு காதுகளில் ஆபரணங்கள். (மூக்கினில் மூக்குத்தி. காதுகளில் தோடு மற்றும் பிற ஆபரணங்கள், பெண்களின் சௌபாக்கியத்தைக் குறிக்கும் ஆபரணங்கள்). நெத்திகெ - உச்சி வகிட்டில் அணியும். சித்ரத க்யாகடெ - ராகடெ என்னும் ஆபரணம். உத்தம க்யாதிகெ - அந்த ராகடையின் கீழ் அணியும் தங்கமயமான. வத்திலி - அதற்கு ஏற்றவாறு. ஷ்யாவந்திக்ஹூவு - தங்க செவ்வந்தி பூ மற்றும். குண்ட்ய - தங்கமயமான கொண்டை.

ஹஸ்தகடகவு - கைக்கு வளையல்கள். மத்தெ - மற்றும். சோட்யவங்கி - மேல் கையில் தரிக்கும் வங்கிகள் (இவற்றை வைத்து). முத்து மாலை. முத்து சரங்கள். ரத்னத பதகவு - (அந்த சரத்தின் நடுவில் இருக்கும்) ரத்ன பதக்கத்துடன். அர்த்திலி - மரியாதையுடன். நாரியு - திரௌபதி. குத்திகை ஹாகலு - பீமசேனனின் கழுத்தில் போட. ஈகெ - ஸ்த்ரீ வேட பீமசேனன். ஹஸ்தினியோ சித்தினியோ - பெண் யானையா, தேவதையா என்று பார்ப்பவர்கள் வியப்படைந்தனர்.

** ஹஸ்தினி, சித்தினி, ஷங்கிணி, பத்மினி என்று பெண்கள் நான்கு விதம். அவற்றில் ஹஸ்தினி, சித்தினி வகையினர் அதிகம் ஈர்ப்பவர்கள். பத்மினி வகையினர் பாதிவ்ரத்யாதி

நற்குணங்களைக் கொண்டவர்கள். இந்த நான்கு வகைப் பெண்களின் லட்சண விவரங்களை காம சாஸ்திரங்களிலிருந்து அறியலாம்.

முடி³கெ³ மல்லிகெ³ முடி³ஸி ஸுகந்த
தொடெது தாம்பூ³ல மடி³ஸிகொடு³தலி
ப்ரௌட⁴ன ஸ்த்ரீரூப நோட³லு கூ²ளனு
கூட³தெ³ ப்ராணவ பி³ட³னெந்த³ளு

மாடித்³யோசனெ கைகூடி³து இந்தி³கெ³
நோடு³ ஆ கிருஷ்ணனு கூடி³த³ ஆடவ
மட³தி³ நீனென்ன ஒட³னெ பா³ரெந்து³
நடெ³த³னா க²ள பி³டா³ரகெ ||17

திரௌபதி, அலங்காரங்களை முடித்து மேலே போர்த்திக்கொள்ளும் அலங்காரத்தைப் பற்றி வர்ணிக்கிறார்.

முடிகெ - தலை முடிக்கு. மல்லிகெ முடிஸி - மல்லிகைப்பூவின் செண்டினை முடித்து. ஸுகந்த தொடெது - உடம்பிற்கு பரிமள சந்தனத்தை தடவி. தாம்பூல மடிஸி கொடுதலி - தாம்பூலத்தை மடித்து கையில் கொடுத்தவாறு. கூளனு - துஷ்ட கீசகன். ப்ரௌடன - புஷ்டனான பீமசேனனின். ஸ்த்ரீரூப நோடலு - ஸ்த்ரீ ரூபத்தைக் கண்டு. கூடதெ - அந்தப் பெண்ணை சேராமல். ப்ராணவ பிடனு - உயிர் விடுவதில்லை (கண்டிப்பாக சேர்கிறேன்). எந்தளு - என்னும் தன் ஆசையைக் கூறினாள்.

பீமசேனன், மாடித்யோசனெ - (ஸ்ரீகிருஷ்ணனின்) சங்கல்பம். இந்திகெ - இன்று. கைகூடிது - நிறைவேறுகிறது. மடதி - ஹே திரௌபதியே. ஆ கிருஷ்ணனு ஹொடித ஆடவ நோடு - ஸ்ரீகிருஷ்ணன் நடத்தும் நாடகத்தைப் பார். (பார்ப்பதற்கு) நீ என்ன ஒடனெ பாரெந்து - நீ என்னுடன் அந்த நடன சாலைக்கு வா என்று கூறினான். ஆ களன பிடாரகெ - அந்த துஷ்டன் அழைக்கும் அந்த இடத்திற்கு. நடெதனு - புறப்பட்டான்.

** கீசகனின் சாதன பூர்த்தியை கவனித்து அவனின் வதம் இன்று நடக்கட்டும் என்று ஸ்ரீகிருஷ்ணன் சங்கல்பம் செய்து, பெண் வேடத்தில் என் மூலமாக நடத்தும் இந்த நாடகத்தை வந்து பார். என்கிறான் பீமசேனன் (ஸ்ரீஹரி தன்னில் நின்று தன் மூலம் கீசகனை கொல்கிறான் என்னும் திட நம்பிக்கை உள்ளவன் பீமசேனன்).

இந்து³முக²த³ அரவிந்த³ நயனத³
மந்த³க³மனெயு ப³ந்த³ளு என்னுத
நந்த³ன தனயன கந்த³ன பா³தெ⁴கெ³
கந்தி³ குந்தி³ ப³ஹுனொந்தெ³னெந்த³

ஹிந்தி³னா ஸுக்ருததி³ந்த³லி நின்னொளா
நந்த³வாகி³ஹுது இந்தி³கெ³ கூடி³து
குந்த³ணதா³ப⁴ரண தந்தெ³ நினகா³கி³
சந்த³தி³ட்டு நீனந்த³வாகெ³ ||18

நடனசாலையின் மஞ்சத்தில் பெண் வேடமணிந்த ஸ்ரீபீமசேனன் சென்று படுத்தபிறகு, கீசகன் அங்கு வந்து அவனுடன் பேசும் விதத்தை வர்ணிக்கிறது இந்த நுடி. இந்துமுகத - சந்திரனைப் போல ஒளிரும் முகம் கொண்ட. அரவிந்த நயனத - கமலத்தைப் போல விசாலமான கண்களைக் கொண்ட. மந்த கமனெயு - மெதுவாக அடி மேல் அடி வைத்து நடக்கும் பெண் (என் சைரந்திரி) வந்தாள். என்னுத - என்று மனதில் நினைத்தவாறு. நந்தன தனயன கந்தனபாதெகெ - ஸ்ரீகிருஷ்ணனின் புத்திரனான ப்ரத்யும்னனின் (மன்மதனின்) வசமாகி. கந்தி - தாபத்தினால் வாடி. குந்தி - வதங்கி. பஹு நொந்தெனு எந்த - இவ்வளவு நாள் மிகவும் கஷ்டப்பட்டேன், இப்போது அதன் பரிகார காலம் வந்திருக்கிறது என்று அறிந்தான்.

உள்ளே படுத்திருந்த பீமசேனனை சைரந்திரி என்று நினைத்து கீசகன் பேசுகிறான். முந்தைய சுக்ருததிந்தலி - என் பூர்வ

புண்ணியத்தால், நின்னொளு - உன்னை சேர்ந்து. ஆனந்தவாகிஹுது - மகிழ்ச்சியுடன் இருப்பது. இந்திகெ கூடிது - இன்று பலித்தது. குந்தணதாபரண - தங்க, ரத்ன ஆபரணங்களை. நினகாகி - உனக்காக. தந்தெ - கொண்டு வந்திருக்கிறேன். சந்ததிட்டு - அவற்றினால் அலங்கரித்தவாறு. நீ - நீ. நந்தவாகி - மகிழ்ச்சி அடைவாயாக, சைரந்திரி.

கு³ல்லு மாட³தி³ரோ மெல்லனெ மாதாடோ³
வல்லப⁴ர்க்கண்ட³ரெ ஹல்லுமுரிவரோ
ப³ல்லவ நினகெ³ ஸல்லது³ ஈ கார்ய
கெ³ல்லலரியெ கொல்லிஸிகொம்பெ³

சல்வெ கேளு நின்ன ஹுல்லெ க³ண்ண நோட¹
கொல்வ பகெ³கெ³ நா கெ³ல்லலாரெனெந்து³
க³ல்ல முத்³தி³ட்டு மையெல்லவ ஹுடு³கலு
கல்லெதெ³யல்லிரெ கு²ல்ல நொந்த³ ||19

இந்த மற்றும் அடுத்த 2 நுடிகளில், ஸ்ரீபீமசேன மற்றும் கீசகனின் பேச்சுவார்த்தை வர்ணிக்கப்பட்டுள்ளது. பீமசேனதேவர், திரௌபதிதேவியின் குரலைப் போலவே கீசகனுடன் பேசினான் என்பது, அவனின் சர்வ ஷக்தித்வத்தை குறிக்கிறது. குல்லுமாடதிரோ - சத்தம் போடாதே. மெல்லனெ மாதாடோ - மெதுவாக பேசு. வல்லபர் - என் கணவர்கள். கண்டரெ - இந்த நம் சந்திப்பினைக் கண்டால். ஹுல்லு முரிவரோ - உன் பற்களை உடைப்பார்கள். பல்லவ - பரஸ்த்ரீ சங்கம் மிகப்பெரிய ஆபத்திற்கு காரணமாகிறது என்பதை அறிந்திருக்கும் ஹே கீசகனே. நினகெ ஸல்லது ஈ கார்ய - என்னுடன் சரசமாடும் இந்த செயல் உனக்கு நல்லதல்ல. அல்லது, பல்லவ - அனைத்தையும் அறிந்தவன். என் பதியு - பீமசேனன். கெல்லலரியெ - அவனை உன்னால் வெல்ல முடியாது. கொல்லிஸிகொம்பெ - அவனால் நீ கொல்லப்படுவாய். ஈ கார்ய - அவனுடன் போரிடுவதான இந்த செயல். நினகெ ஸல்லது - உன்னால் ஆகாது.

இவ்வாறு சொல்லும் பீமசேனனின் பேச்சுக்கு கீசகன் இவ்வாறு சொல்கிறான்.

செல்வெ - ஹே சுந்தரியே. கேளு - கேள். நின்ன ஹுல்லெ கண்ண நோட - உன் கடைக்கண் பார்வை. கொல்வ பகெகெ - என்னை கொல்லும் விதத்தை. நா கெல்லலாரெனு - என்னால் எதிர்க்க முடியவில்லை. எந்து - என்று சொல்லியவாறு. கல்லமத்திட்டு - தாடையை திருப்பி. அல்லது, ஹுல்லெகண்ண நோட கொல்வ பகெகெ - சபல பார்வையினால் என் பிராணனையே இழுக்கும் பார்வை உள்ள உனக்கு. நா கெல்லலாரெனெந்து - உன் கணவர்களை நான் வெல்ல மாட்டேன் என்று நினைக்கிறாயா? என்றவாறு, கல்லவ முத்திட்டு, மையெல்லவ ஹுடுகலு - தேகத்தை தடவிக்கொண்டு. எதெயல்லி கல்லு இதெ - மார்பு கல்லினைப் போல திடமாக இருக்கிறது என்று. குல்ல - துஷ்டன் கீசகன். நொந்த - வியப்படைந்தான்.

நாரியோ நீனேனு மாரியோ இன்னொந்து[3]
பா[3]ரி எனகெ[3] நின்ன மோரெ தோரிஸெந்து[3]
தீ[4]ரன ஸமீப பா[3]ரதெ[3] ஓடு[3]வ
தா[3]ரிய நோடு[3]த்தலிரலாக[3]

பா[3]ரத[3]ந்த[2] பரனாரேர மோளெப
க்ரூரகெ[3] ஈ ரூப கோ[4]ரவாகி[3]ஹுது[3]
ஸாரத[3] மாதிது[3] யாராத[3]ரேனீக[3]
மாரன தாபவ ஹாரிஸுவெ ||20

நாரியோ நீனேனு மாரியோ - கல்லைப் போன்ற கடினமான தனங்களைத் தொட்டு வியப்படைந்த கீசகன், நீ பெண்ணா அல்லது ம்ருத்யு தேவதையா. இன்னொந்து பாரி - இன்னொரு முறை. எனகெ - எனக்கு. நின்ன மொரெ தோரிஸு - உன் முகத்தைக் காட்டு. எந்து - என்றவாறு. தீரன - பீமசேனனின். ஸமீப பாரதெ - அருகில் வராமல். ஓடுவ தாரிய நோடுத்திரலு

- அங்கிருந்து ஓடுவதற்கு முயற்சிக்க. ஆக - கீசகனின் அந்த நிலையை அறிந்து. பாரதந்த பரனாரேரெ - ஒப்புக்கொள்ளாத பர ஸ்த்ரீயர்களை. மோஹிப - மோகிக்கும் (அடைய விரும்பும்). க்ரூரகெ - அந்தப் பெண்களின் மனதினை நோகடிக்கும். உக்ர ஸ்வபாவனுக்கு. ஈ ரூப - இந்த என் ரூபம். கோரமாகிஹுது - பயங்கரமாக இருக்கும். இது ஸாரத மாது - என் ரூபம் இத்தகையது என்பது உண்மையான பேச்சு. யாராதரேனு - நீ எத்தகையவனாக இருந்தால் என்ன? ஈக - இப்போது. மாரன தாபவ - உன் மன்மதனின் தாபத்தை. ஹாரிஸுவெ - இல்லாததாக ஆக்குகிறேன்.

** பீமசேனனின் ரூபம், யமதேவனைப் போல, பாபிகளுக்கு பயங்கரமானதாகவும், சஜ்ஜனர்களுக்கு அழகானதாகவும் இருக்கிறது.

ஷுத்³த⁴ ஹெண்ணெந்து³ ப்ரஸித்³த⁴வாகி³தெ³ என்ன
வித்³யவ நினகீ³ ஸத்³யகெ தோருவெ
நித்³ரெ கெடு³வந்த² பு³த்³தி⁴யு நின்னது³
ஸத்³து³ மாட³தெ³ முத்³தி³ஸென்ன

பு³த்³தி⁴வந்தெந்து³ வத்³தி³கெ³ ஹோக³லு
எத்³து³ ஸமீரஜ கு³த்³த³லு கீசக
பி³த்³த³னு பூ⁴மிலி கெ³த்³தெ³னுத அனி
ருத்³த⁴ன ஸ்மரிஸுதலெத்³த³ பீ⁴ம ||21

ஷுத்த ஹெண்ணெந்து - நான் பரிசுத்த பெண் என்று, பிரசித்தவாகிதெ - ஞானிகள் அறிந்திருக்கின்றனர். என்ன வித்யவ - என் வித்யையை. நினகெ - உனக்கு. ஈ ஸத்யக்கெ - இந்த நொடியில். தோருவெ - காட்டுகிறேன். நித்ரெ கெடுவந்த - தூக்கம் வராதவாறு. புத்தி நின்னது - காமபீடிதமான மனம் உன்னுடையது.

(காமவசப்பட்டவர்களுக்கு தூக்கம் இல்லை. வெட்கம் இல்லை. பயம் இல்லை). ஸத்து மாடதெ - சத்தம் செய்யாமல்.

முத்திஸென்ன - என்னை கொஞ்சுவாயாக. (அடுத்து என்ன ஆயிற்று என்றால்). புத்திவந்தெ எந்து - நீ அறிவாளி என்று சொல்லி, (கீசகன்), வத்திகெ - அருகில் செல்ல. ஸமீரஜ - வாயுபுத்திரனான பீமசேனன். எத்து - (மஞ்சத்திலிருந்து) எழுந்து. குத்தலு - முஷ்டியினால் உதைக்க (கீசகனின் தலை மேல் குத்த). கீசக - கீசகன், வயிற்றில் தலை சிக்கி, இறந்தவனாக. பூமிலி பித்தனு - பூமியில் விழுந்தான். கெத்தெனு எனுத - தன் வேலை முடிந்தது என்று (கீசகனின் வதை ரூபத்திலான ஸ்ரீஹரி சேவை முடிந்தது என்று). அனிருத்தன ஸ்மரிஸுத - நீயே என்னில் நின்று செய்வித்த இந்த செயலால் மகிழ்வாயாக என்று ஸ்ரீகிருஷ்ணனை நினைத்தவாறு, பீம எத்த - கீழே விழுந்திருந்த கீசகனின் தேகத்தை உருட்டியவனாக, பீமன் எழுந்து புறப்பட்டான்.

** அனைத்து கலைகளிலும் வல்லவனான ஸ்ரீபீமசேனன், அந்த காலத்தில் துஷ்டர்களை அழிக்கும் பல பராக்கிரமங்களை (துஷ்டர்களுடன் சண்டை போடும் வித்யையை) வெளிப்படுத்துவான் என்னும் அர்த்தத்தை 'என்ன வித்யவ தோருவெ' என்ற வாக்கியத்தில் வெளிப்படுத்துகிறான் என்பதை அறிய வேண்டும்.

** பிற புருஷர்களின் ஸ்பர்ஷம் இல்லாத சுத்த ஸ்த்ரி என்று நான் புகழ் பெற்றிருப்பதால், சத்தம் செய்யாமல், நான் சொல்வதையே செய் என்று திரௌபதியிடம், ஸ்ரீபீமசேனன் சொல்கிறான். அனைத்து ஜீவர்களுக்கும் பரபுருஷனான ஸ்ரீஹரியே பதி. ஜீவோத்தமனான ஸ்ரீபீமசேனன், தோஷதூரன் ஆகையால், 'ஷுத்தமான பெண்'. ஸ்ரீஹரியையே கணவனாகக் கொண்டவன். இவனுக்கு முக்தியில் ஸ்த்ரி ரூபத்தினால், பரமாத்மனின் அங்கசங்கத்தினால் ரதி-ஸௌக்யம் உண்டு (ப்ரு.பாஷ்ய). ஸ்ரீஹரியின் அங்கசங்கத்திற்குக் கூட, தகுதி பெற்றுள்ள சுத்த பெண் என்று பொருள்.

கெட்ட கீசக தா கொட்ட லாஞ்ச²னதி³
பெ³ட்டத³ந்த² தே³ஹ பி³ட்ட நின்னவன
பட்டாகி³ தோருவெ த்³ருஷ்டிஸு என்னலு
ப்⁴ரஷ்டன நோடு³வுதே³னெந்த³ளு

கொட்ட பா⁴ஷெயு ஈக³ முட்டிது நினகெ³
கிருஷ்ணன த³யதி³ கஷ்டவு ஹிங்கி³து
பட்டணகீ ஸுத்³தி³ முட்டத³ முஞ்செயெ
கு³ட்டிலி போகு³வெ த²ட்டனெந்த³ ||22

கெட்ட கீசக - துஷ்டனான கீசகன். கொட்ட லாஞ்சனதி - நீ அவனுக்குக் கொடுத்த குறிப்பினைப் போல, உன் சங்கம் கிடைக்கிறது என்னும் உற்சாகத்தில் அங்கு வந்து. தா - தான். பெட்டதந்தெ - மலையைப் போன்ற தன் பெரிய அசுர உருவத்தை. பிட்டு - விட்டு; நின்னவன - உன்னுடன் சரசமாடுவதற்கு விரும்பிய அந்த துஷ்டனை. பட்டாகி தோருவெ - நன்றாக காட்டுகிறேன். த்ருஷ்டிஸு - அவனின் கதி என்னவாகிறது என்பதைப் பார். என்னலு - என்று பீமசேனன் கூற. பிரஷ்டன - அந்த பதிதனை, பாவி கீசகனை. நோடுவுதேனெந்தளு - திரௌபதி, பார்ப்பது ஏன் என்றாள்.

நினகெ கொட்ட பாஷெயு - அந்த துஷ்டனைக் கொன்று யமனிடம் அனுப்புகிறேன் என்று உனக்குக் கொடுத்த பேச்சு (உன் எதிரில் செய்த சபதம்). ஈக முட்டிது - இப்போது நிறைவேறியது. கிருஷ்ணன தயதி - ஸ்ரீகிருஷ்ணனின் அருளால். ஈ கஷ்டவு - இந்த துஷ்டனின் தொந்தரவினால் வரவேண்டிய மானபங்க ரூபமான பயம் - இந்த கஷ்டமான நிலை. ஹிங்கிது - நீங்கியது. (கிருஷ்ணனின் அருளாலேயே கொடுத்த வாக்கு இப்போது நிறைவேறியது). ஈ ஸுத்தி - கீசகனின் மரணத்தின் பேச்சு (தகவல்). பட்டணகெ முட்டத முஞ்செயெ - ஊரில் தெரிவதற்கு முன்னரே. குட்டிலி - ரகசியமாக, யாருக்கும் தெரியாமல். தட்டனெ போகுவெ - என்

இருப்பிடமான சமையலறைக்கு செல்கிறேன். எந்த - என்று பீமசேனன் கூறினான்.

** காமரூபனான தைத்ய அசுரன் உக்ர ஸ்வரூபன். அத்தகையவர், மரண காலத்தில் தம் மூலரூபத்தையே அடைந்து, தேகதியாகம் செய்வர் என்பது சாஸ்திரத்தின்படியான விஷயம். பூதனி, த்ருணாவர்த்த ஆகிய தைத்யர்கள் ஸ்ரீகிருஷ்ணனால் கொல்லப்பட்டபோது, அவர்களின் மலை அளவிலான தேகங்களைக் கண்டு கோகுலத்து மக்கள் வியப்படைந்தனர் என்று பார்க்கிறோம்.

** ஸைரந்திரியின் நிமித்தத்தினால், அவளின் பதியான கந்தர்வனால், கீசகன் கொல்லப்பட்டான் என்று அறிந்த, கீசகனின் 105 தம்பிகள், கீசகனின் தேகத்துடன் சைரந்தியையும் தகனம் செய்வதற்காக அவளை சிறைப்படுத்தி அழைத்துச் செல்ல, ருத்ர தேவரிடமிருந்து யாராலும் வெல்லப்பட முடியாதவர்கள் என வரம் பெற்ற அவர்கள் அனைவரையும் ஸ்ரீபீமசேனன், தன் லீலையினால் கொன்று, திரௌபதியை விடுவித்து, இந்த செய்தி ஊரில் அனைவருக்கும் தெரிவதற்கு முன்னர், ஸ்மஷான மார்க்கத்தினால் வேகமாக வந்து, தன் இருப்பிடத்தை அடைகிறான். 'பட்டணகீ ஸுத்தி முட்டத முஞ்செயே' என்னும் வாக்கியம் இந்த விஷயத்தையே சொல்கிறது.

அரஸி நின்னொளு ஸரஸ பே³கெம்ப³
புருஷன ஜீவதொ³ரஸெ கொந்தெ³னு
ஹருஷதீ³ புரத³ அரஸு எம்மனு
இரிஸிகொண்டொ³ந்து³ வருஷவாயிது

பெ³ரஸித³ ஸ்னேஹக்கெ விரஸப³ந்தெந்து³
ஸரஸிஜாக்ஷியு கரெஸி நின்னொள
கி³ரஸதி³ரெ ஹயவத³னன பத³பத்³ம
ஸ்மரிஸுத க³தெ³யனு த⁴ரிஸுவெனு ||23

அரசி - ஹே திரௌபதியே. நின்னொளூ - உன்னுடன். ஸரஸ பேகெந்து - சரசமாட வேண்டும் என்று விரும்பிய. புருஷன - புருஷனை. ஜீவதொரெஸெ - உயிருடன். கொந்தெனு - கொன்றேன். மல்யுத்தம் செய்து கொன்றேன். அவனை ஏமாற்றி கொல்லவில்லை. ஈ புரத அரஸு - இந்த பட்டணத்து அரசன். ஹருஷதி - மகிழ்ச்சியுடன். எத்மனு - நம்மை. (திரௌபதி சஹித பஞ்ச பாண்டவர்களை). இரிஸிகொண்டு - தன்னுடன் வைத்துக் கொண்டு. ஒந்து வருஷவாயிது - ஓராண்டு காலம் ஆயிற்று (அஞ்ஞாத வாஸத்தின் ஓராண்டு காலம் முடிவதற்கு இன்னும் சில நாட்களே உள்ளன).

பெரஸித ஸ்னேஹக்கெ - (இவ்வளவு காலம்) சேர்ந்து இருந்ததால் வளர்ந்த நட்பிற்கு. விரஸபந்தெந்து - (உன் கணவர்கள் என்னும் கந்தர்வர்னால் உண்டாயிற்று என்று கீசகனின் வதையினால்) இப்போது விரோதம் வந்தது. ஸரஸிஜாக்ஷியு - ராணி சுதேஷ்ணை. கரெஸி - உன்னை அழைத்து. நின்ன ஒளகிரஸதிரெ - உன்னை தன் அந்தப்புரத்தில் என்றும் போல வேலைக்கு வைத்துக் கொள்ளாவிட்டால். ஹயவதனன - ஸ்ரீகிருஷ்ணனின் பதபத்ம ஸ்மரிஸுத - பாதகமலங்களை நினைத்தவாறு. கதெயனு - என் கதையை. தரிஸுவெனு - ஏந்துகிறேன்.

கீசகனின் வதம் ஆனபோது, அஞ்ஞாத வாசத்தின் காலம் முடிவதற்கு வெறும் 13 நாட்களே மீதம் இருந்தது. சுதேஷ்ணை, திரௌபதியை உடனடியாக வெளியே அனுப்பினால் (வேலைக்கு வைத்துக் கொள்ளாவிட்டால்), ஸ்ரீபீமசேனன் தன் கதையை ஏந்துவேன் என்று சொல்கிறான். அதாவது, திரௌபதி - இன்னும் 13 நாட்கள் மட்டும் உன்னிடம் இருப்பதற்கு அவகாசம் கொடு, பிறகு என்னை இரு என்றாலும், நான் இருப்பதில்லை - என்று சுதேஷ்ணையிடம் சொல்கிறாள்.

சுதேஷ்ணை அவளின் இஷ்டத்திற்கு எதிராக நடப்பதற்கு (அவளின் கணவர்கள் என்னும் கந்தர்வர்களின்) பயத்தினால்

இதற்கு ஒப்புக் கொள்கிறாள். அஞ்ஞாத வாசத்தின் காலத்தை நன்றாக அறிந்த சர்வக்ஞனான ஸ்ரீபீமசேனன், கதையை தரித்து, அந்த காலத்திற்குள் வெளிப்பட்டு, அதன் மூலம் தர்மராஜனின் ஆணைப்படி, திரும்ப அரண்யவாஸ, அஞ்ஞாத வாஸங்களை அனுபவிக்க, துரியோதனனுக்கு அவகாசம் செய்து கொடுப்பவன் அல்ல. சர்வக்ஞளான திரௌபதியும், கதையை ஏந்துவேன் என்று கூறிய பீமசேனனின் பேச்சினைக் கேட்டு, உடனே வெளிப்பட்டு விடுவான் என்று பயப்படுவதைப் போல நடிக்கிறாள்.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

***